பதிவு எண் 2041 மகாத்மா காந்தி வாழ்க. தனிப்பிரதி விலை அணு ஒன்று



வருட சந்தா முன் பணம் ...	ரு 3—0
6 மாத சந்தா ,, ...	ரு 1–12
வெளி நாட்டிற்கு ,, ...	ரு 4—0

[வாரப்பதிப்பு]

ஆசிரியர்

ஈ. வெ. இராமசாமி நாயக்கர்

வியாபாரிகள் விளம்பரம் அங் 1க்கு அ. 12.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரு. 2.
தனி விகிதமும் உண்டு.

மாலை 3 | ஈரோடு, பிரபவ-ளு வைகாசி-மீ 30 உ (12—6—27) ஞாயிற்றுக்கிழமை. | மலர் 7.

மின்சார ரசம்.

மின்சாரரசம்.

ஒன்றே எல்லா வியாதிகளுக்கும் தேவாமிர்தம் போன்றதென உலகப்பிரசித்தி பெற்றுள்ளது. எந்த வியாதிக்கும் துளிக்கணக்கில் உபயோகித்து நிமிஷக்கணக்கில் குணம் பெறலாம். பத்தியமில்லை. அனுபானமில்லை. பால்யர் முதல் விருத்தாப்பியர் வரையில் ஸ்திரீகள் உள்பட எல்லோரும், எக்காலத்திலும் பயமின்றி இதை உபயோகிக்கலாம். பாஷாண சம்மந்தமான சரக்குகள் இதில் இல்லை.

புட்டி 1-க்கு ரூ. 2.
தபாற் சார்ஜ் வேறு.

REGISTERED TRADE MARK
MINSARA RASAM

மின்சாரரசம்.

ஒரு புட்டி கையிலிருந்து விட்டால் வேறு டாக்டர்களை தே- வேண்டிய அவசியமே இராது ம- தர்களுக்கு வரும் ஆபத்தை யா- அறிவர்? எந்தசமயம் எப்படி இருக்குமோ? ஒரு வே- ஒரு துளி மின்சாரரசமே ஒருவரை மரண அபாயத்திலிருந்து விடுவித்து விடலாம். அப்படி அநேகர் உயிர் தப்பியுமிருக்கின்றனர். ஆகவே நோயாளிகளுக்கு இது ஓர் உயிர்த் தோழன். ஒவ்வொரு குடும்பத்திற்கும் இன்றியமையா ஆபத்து -சன். இன்றைக்கே எழுதுங்கள்.

கைகண்ட மருந்து. கேட்லாக் இனும்.

விலாசம்:— மின்சாரரசம் கம்பெனி லிமிடெட், சேலம். (S. I.) தந்திவிலாசம்:—"Rasamco"

மதுரையில் இதன் முக்கிய வியாபாரிகள்:- T. N. சோக்கலிங்கம் பிள்ளை & சன்ஸ் இங்கிலீஷ் மருந்து ஷாப் வியாபாரம், வடக்கு சித்திரை வீதி, மதுரை.

மலாய் நாடுகளுக்கு சோல் ஏஜண்டுகள்:— ஆர். இ. முகம்மது காசீம் & கம்பெனி, 'கிள்ளாங்,' பினங், சிங்கப்பூர்.

தூத்துக்குடி-

வாலிப ஒற்றுமைச் சங்கம்.

முதலாம் ஆண்டு நிறைவுவிழா

ஷை விழாவானது 5-6-27 தி ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு ஷை சங்ககட்டடத்தின் முன்னால் போடப்பட்டிருந்த அழகிய பந்தலில் திருநெல்வேலி ஜில்லா போர்டு பிரசிடெண்ட் ஸ்ரீமான் திவான் பகதூர் குமாரசாமி ரெட்டியார் அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் நடை பெற்றது. கூட்டத்திற்கு ஸ்ரீமான்கள் திருநெல்வேலி சர்க்கார் வக்கீல் ஆவுடயப்பபிள்ளை, தூத்துக்குடி தாலூகா போர்டு பிரசிடெண்டு சங்கரலிங்க கவிராயர், சி. கா. சாகூல் அமீது மரைக்காயர், சி. வ, நா. சின்னக்கண்ணு பிள்ளை, திருநெல்வேலி டாக்டர் நெட்டோவ், ராமநாத தேசிகர், ஸ்ரீ வைகுண்டம் விரபத்திரபிள்ளை ப வி. குற்றாலலிங்கம் பிள்ளை வி. ஓ. சிதம்பரம் பிள்ளை சுரேந்திரநாத் ஆரிய, ஈ. வெ. ராமசாமி நாயக்கர், முதலியவர்களும் மற்றும் சுமார் 1000 கனவான்களும் விஜயம் செய்திருந்தார்கள். அக்கிராசனரையும் வி. ஓ. சிதம்பரம்பிள்ளை ஈ. வெ ராமசாமி, ஆரியா ஆகிய கனவான்களை மேளவாத்தியத்துடன் ஊர்வலமாக அழைத்துச் சென்றதும் அக்கிராசனருக்கு வரவேற்பு பத்திரம் வாசித்து கொடுக்கப்பட்டதும் கடவுள் வாழ்த்து சொல்லப்பட்டதும்காரியதரிசியால் சங்க அறிக்கை பத்திரம் வாசிக்கப்பட்டது.

அறிக்கைப் பத்திரம்

ஐயன்மீர்

பாலும் தேனும் பொழிந்தொழுகும் நம் பாரத நாட்டின் விடுதலையைக் கருதி ஆரம்பிக்கப்பட்டிருப்பதும், தேசத்தின் நலத்தையும், மக்களின் க்ஷேமத்தையும் கோரி இராட்டின சக்கிரம் சுழற்றி வருவதும், அக்கிரமத்திற்கும் அநீதிக்கும் சத்துருவாயிருந்து நீதிக்கு உற்ற துணையாயிருப்பதும் ....எது?

நமது வாலிப ஒற்றுமைச் சங்கமே.

இச்சங்கம் சென்ற 1925 ஸு தீபாவளி தினத்தன்று உருவப் பெற்றதாகும். ஆதலினால் நமது முதலாம் ஆண்டு பூர்த்தி சென்ற 1926ம் வருடம் அற்பசி மீ நடந்தேறியிருக்கவேண்டியது. எனினும் எங்களுக்கு ஏற்பட்ட அவகாசக் குறைவினாலும் ஏனைய மாசுகளாலும், ஆண்டு விழா சிறப்பிக்க தாமதமானது பற்றி நாங்கள் மனமிக உழைகின்றோம். இந்நாள் முதல் எந்நாளும் நந்நாளாவதாக! ஆண்டுதோரும் ஆண்டு விழாக்கள் நடைபெறுவதாக! பரம் பொருள் அருள் புரிக!

* இதற்கிடையில் கதர் முன்னேற்றத்திற்காக ஸ்ரீமான் வ. சீனிசெட்டியார் அவர்கள் நெய்யற்போராட்டம் ஒன்று நிகழ்த்தல் வேண்டும் என விளைந்து பெரும் முயற்சி எடுத்தனர். எடுத்தும் இவ்வமயம் நடைபெறுதற்கு காலப்போக்குகள் இடங்கொடுக்கவில்லை அது கூடிய சீக்கிரம்நிறைவேற்ற கடவுள் கடாக்ஷம்உண்டாவதாக!

சங்கத்தில் அங்கத்தினராய் சேர விரும்புவோர்கள் பிரவேசக்கட்டணம் அணா எட்டும் சந்தா மாணவர் ஆயின் அணா இரண்டும் ஏனையராயின் அணா நான்கும் செலுத்தி சேர்ந்துகொள்ளலாம். இது சமயம் இச்சங்கத்தில் 51 அங்கத்தினர்கள் சேர்ந்துள்ளார்கள்.

இங்கு வாரம் ஓர் முறை பொதுக் கூட்டம் நடைபெற்று வருகிறது. இடையிடையே சென்னை பச்சையப்பன் கல்லூரித் தலைமைத் தமிழாசிரியர் திருவாளர் மணி திருநாவுக்கரசு முதலியார் அவர்கள், மணம் பூண்டி திருவாளர் ம. ரா. குமாரசாமி பிள்ளை அவர்கள் போன்ற பெரியார்கள் பலரும் பிரசங்க அருள் புரிந்துள்ளார்கள். அன்னார் அனைவருக்கும் யாம் எமது மனமார்ந்த நன்றியைச் செலுத்துகின்றோம்.

சபையின் அங்கத்தினராலும், அபிமானிகள் பலரின் பேருதவியாலும் இச்சபைக்கு ஆங்கிலத் தினபதிப்புப் பத்திரிகைகள் மூன்றும், தமிழ் தினப் பதிப்புக்கள் நான்கும், தமிழ் வாரப்பத்திரிகைகள் இரண்டும் வந்துகொண்டிருக்கின்றன.

மேலும் சங்கத்திற்காக புத்தக வாசகசாலை யேற்படுத்தி சுமார் 277 புத்தகங்கள் இருந்து வருகின்றன. அதை மென்மேலும் விருத்திசெய்ய வேண்டிய முயற்சிகள் செய்து கொண்டிருக்கிறோம் அத்துடன் சங்கத்தினரின் தேகப்பயிர்ச்சியைக் கருதி பந்து விளையாட்டுக்களும் நடந்து வருகின்றன.

“இங்குண்டு அங்கில்லை, அங்குண்டு இங்கில்லை, இங்கில்லை அங்கில்லை, இங்குண்டு அங்குண்டு” எனும் தத்துவப் பொருளின் வாயிலான் எக்காரியம் செய்தல் வேண்டுமாயினும் அதற்கு சிற்றய பொருளுதவி வேண்டியது இப்பூவுலகத்தில் இயற்கை. அவ்வாறே எங்களுக்கு இதுகாறும் பொருள் கொடுத்துப் போற்றி வந்த செல்வந்தர்களும் இன்னும் அவ்வாறே போற்றுவாரியாவர்களும் நீடூழிவாழ்ந்து நலம் பல பெற எல்லாம் வல்ல இறைவனை நோக்கித்துதிக்கின்றோம்.

இங்ஙனம்

வாலிப ஒற்றுமைச் சங்கத்தார்.

பிறகு ஸ்ரீமான் சிதம்பரம் பிள்ளை அவர்கள் வாலிபர்கள் செய்ய வேண்டிய வேலை என்பதைப்பற்றி பேசுகையில், பார்ப்பனர் தங்கள் வயற்றுப்பிழைப்புக்காகவும் தங்கள் இனத்தவர்கள் உத்தியோகத்திற்காகவும் ஏற்படுத்திக் கொண்டிருக்கும் “அரசியல்” தந்திரமாகிய காங்கிரஸ், முதலியதுகளில் விழுந்து கெட்டுப்போகக் கூடாது என்றும் சமத்துவமே வாலிபர் கடன் என்றும் சென்னார்.

ஸ்ரீமான் ஆரியா அவர்கள் வாலிப சங்கம் அவசியம் என்றும், சுயராஜ்ஜீயம் என்கிறபோலி இயக்கத்தில் வாலிபர்கள் சிக்கி ஏமாந்து போகக் கூடாது என்றும், நமது சமூகத்தை சுயமரியாதை உள்ள சமூகமாக்குவதற்கு உயிரைவிடத் தயாராயிருக்கவேண்டுமென்றும் சொன்னார்.

பிறகுஸ்ரீமான் ராமசாமி நாயக்கர்

பார்ப்பனர்கள் தங்கள் உத்தியோகத்திற்கும் வயிற்றுப் பிழைப்புக்கும், ‘அரசியல்’ ‘காங்கிரஸ்’ ‘சுயராஜ்யம்’ ‘சர்க்காருடன்சண்டை’ ‘தேசியம்’என்கிற‘சுயநலஸ்தாபனங்’களையும், ஏமாற்றும் வார்த்தைகளையும், வைத்துக்கொண்டு நம்மை ஏமாற்றுவது போலவே இந்து மதம், திதி, திவசம் முதலிய சடங்கு மற்றும் பலவித விக்ரக ஆராதனை முதலியவைகளைவைத்து நம்மை ஏமாற்றி பிழைப்பதுடன் அவைகளின் மூலம்நம்மை அடிமை ஆக்கி நிரந்தரமாய் சுயமரியாதை இல்லாமல் செய்து பூச்சி, புழு இழிந்த மிருகங்கள் முதலிய வைகளை விட கேவலமாய் நடத்திப் பிழைக்கிறார்கள் என்றும் சொல்லி மதத்திலும் சடங்குகளிலும் உள்ள புரட்டுகளை விஸ்தாரமாய் யாவருக்கும் உண்மை என்று படும் படி எடுத்துச்சொன்னார். முடிவுரையில் அக்கிராசனர் ஸ்ரீமான்குமாரசாமி ரெட்டியார் அவர்கள் இவற்றைத்தழுவியே பேசி மக்களுக்கு முதலாவது சுயமரியாதை அவசியம் வேண்டுமென்றும் இன்ன இன்ன வழிகளில் நாம இழந்திருக்கிறோம் என்றும் பேசிமுடித்தார். இடையிடையே பண்ணிசையுடன் ஒரு பெண்மணியினால் தேவாரம் வாசிக்கப்பட்டது. ஆரரை மணிமுதல் 10 மணி வரை கூட்டம் கலையாமல் இருந்தது, கூட்டம் முடிந்ததும் சாப்பிட்டுவிட்டு ஸ்ரீமான் ரெட்டியார் மோட்டாரில் திருநெல்வேலிக்குப் பிரயாணமாகிவிட்டார். நாயக்கரும், சிதம்பரம் பிள்ளை அவர்களும் மறுநாள் காலை வண்டியில் முறையே திருச்சிக்கும கோவில்பட்டிக்கும் சென்று விட்டார்கள் ஸ்ரீமான் ஆரியா அவர்கள் மறுநாள் வாலிபருக்காக ஒரு பிரசங்கம் செய்யவேண்டுமென்று அங்குள்ள பிரபல வாலிபர்கள் கேட்டுக்கொண்டதின் மேல் அங்கேயே தங்கி இருக்கிறார் என்று ஒரு நிருபர் எழுதுகிறார்

காதி நாடா சேலை.

16 முழ நீளம் $2\frac{1}{2}$ முழ அகலம்

இது பார்வைக்கு மிகவும் சோத்தியாகவும் சுற்றிலும் பூக்கொடிகள்போட்டு மத்தியில் பெரிய பூக்கள் உள்ளது விலை ரூபாய் 5—0—0.

விலாசம்:— கனக அண்டு கம்பெனி
பார்க்டவுன், மதராஸ்.

முன் விலை ரூ. 14. இப்பொழுது ரூ 7.

22 காரட் ரோல்டு கோல்டு புது மாடல் கைக்கடியாரங்கள்.



மேற்கண்டபடி எந்த ஷேப் வேண்டுமானாலும் அனுப்பப்படும். வேலைப்பாடு மிகவும் உறுதி கையில் கட்டிக்கொண்டால் தங்க ஆபரணம் போல் இருக்கும். ஒவ்வொரு கடியாரத்திற்கும் ரோல்டு கோல்டு அமெரிக்கன் கைச்சங்கிலி இனமாய்ச் சேர்த்து அனுப்பப்படும் 5 வருஷம் உத்திரவாதம். ரூ. ஏழுமட்டும்.

CANADIAN WATCH PEOPLE,
George Town, Madras.

கோவை பார்ப்பனரல்லாதார் வாலிபர் மகாநாட்டிற்கும் வாலிபர் சங்கங்களுக்கும்

கைவல்லிய சாமியார் எழுதுவது.

“ஊக்முளதேல் சிரியவருரையும மேற்கொள்ளுக” என்னும் நியாயம் எல்லாபாஷைகளிலுமிருக்கின்றன.

வாலிபர்களே— நீங்கள் ஒவ்வொருவரும் உங்களது வல்லமையில் நம்பிக்கையுடையவர்களாகயிருக்கவேண்டும். ஒவ்வொருவருடைய ஆத்மாவிலும் அனந்தமான சக்தி அடங்கிக்கிடக்கிறதென்பதையும் நம்புங்கள். அந்த நிச்சயத்தின் மேல் நீங்கள் வேலை செய்வீர்களானல் உங்களுடைய ஜன சமூகத்தைப் புனர் ஜென்மமெடுக்கச் செய்வீர்கள். மேனாட்டார்கள் தங்கள் சக்தியின் மேல் நம்பிக்கைவைத்திருக்கிறார்கள். நமக்கு அதில்லை. இதுவே நமக்கும் அவர்கட்கும் உள்ள உயர்வு தாழ்விற்குக் காரணம். எதற்கும் முதற் கருவிபணமென்றாலும் தேச முன்னேற்றத்திற்குப் பணத்தைவிட பரிசுத்தமான யூகமுள்ளவாலிபர்களே அவசியமானவர்கள்' அவர்களிருந்தால் மற்றதெல்லாம் தானே வந்துவிடும். பலசாலிகளாயும் தேகாரோக்கிய முள்ளவர்களாயும் புத்தி கூர்மையுள்ளவர்களாயும் சிறுவர்களாயும் இருப்பவரே கடவுளையடைவர் என்று சுருதிகள் முறையிடுகின்றன. உங்கள் வருங்கால நிலையைநிர்ணயிப்பதற்கு இதுதான் தக்க சமயம். உங்கள் வருங்கால நிலையைச்சுகப்படுத்தவேண்டுமானல் அதிலுள்ளதடைகளையெல்லாம் எதிர்ப்பதற்கு வேண்டிய புத்தியும் தைரியமும் வேண்டும். இல்லையேல் பெரிய காரியங்கள் கைகூடாது. எதற்கும் தர்க்கமும் நியாயம் பேசுவதும் பிரயோஜனப்படாது. கருத்திற்கொவ்வாத யுக்திவாதமே இப்போதையபெரியோர்களின் மூளைக்கு இருப்பிடமாகப் போய்விட்டது. அதனால் மனம் விஷயங்களை நிச்சயப்படுத்தும் சக்திகெட்டு காரியங்களை அசிரத்தையோடு விட்டு விடுகிறது. பின் மனதிற்கு திகிலுண்டாய் சுற்றிலுமுள்ள மற்றவர்கள் மனமும் திகிலில் பட்டு சிறிது தைரியத்தோடு கூடின மனதையும் தன்னோடிழுத்துப் போட்டு எல்லோருடைய மனமும் கோழைப்பட்டுப் போகிறது மனம் கோழைப்பட்டால் நிச்சய புத்திபலயீனத்தில் கொண்டு போய்ச் சேர்க்கும். விவேகத்தின் விசாரணை எல்லாம் விஷயத்தில் பொருந்தாது. இந்த நிலைக்கு ஆதரவு வேண்டும். ஆதரவுதேடும் சமயமே இவர்களை க்கொண்டு போய அடிமையாக்கிவிடுகிறது. இந்த நிலைமையோடு இருப்பவர்கட்கே சத்துருக்கள் எஜமானாகிறார்கள். வஞ்சனையால் வஞ்சகர்கள் இவர்களை வசப்படுத்துவதும் அப்பொழுதே தேகம் பலயீனப்பட்டுமனம சோர்ந்து இருக்கும் சமயமே வியாதி யென்னும் கொடிய கிருமிகள் மனிதனை அடிமையாக்கிக் கொள்ளுகின்றன.

உங்களுடைய தேசாபிமானக் கொள்கையின் இடையூறுகளையும் ஜன சமூகத்துன்பங்களையும் நீங்கள் நிவர்த்திக்கவேண்டுமென்று சங்கங்கள் ஏற்படுத்தியிருக்கிறீர்கள். ஆண்மையை நசுக்கிப் பழிக்கிடமாக்கிய குரூரமான ஜாதி ஆசாரங்களினின்றும், பரஸ்பர அன்பினல் விடுபட்டு தலைதூக்கி தோள் கோர்த்து நிற்போமென்பதே உங்கள் சங்கங்களின் எண்ண மனத்தெரிகிறது. நம் தேசத்துப் புராதன சரித்திரமாகிய நாடகம் சோகமாகவே முடிந்திருக்கிறது என்பதைப்படித்திருப்பீர்கள். ஒரு சிலர்ஒன்று சேர்ந்து யோசனை பண்ணி உங்களை என்றைக்கும் பிரிவுபட்டு நிற்க வழிகள் தேடியதையும் தேடி நிற்பதையும் காண்கிறீர்கள். நமக்கு மிகவும் இனிமையாகத்தோன்றிய ஸ்வதந்திரங்களைப்பிறர் அனுபவியாமல் நாமும்தடுத்து வருவதையும் நீங்கள் பார்க்கிறீர்கள். சர்வசாதாரணமாக வழங்கத்தக்க உரிமைகளுக்குச்சிறப்புரிமைகள் என்று பெயர் சூட்டிமானுஷீகத்தை அவமானப்படுத்துவதும் உங்கள் முன் நிற்கிறது. எத்தனையோ சாஸ்திர மூட்டைகளை வைத்துக்காக்கும் கூட்டத்தாருடன் நீங்களும் சேர்ந்து இந்த அகம்பாவத்தை ஸ்திரமாக்கின கொடுமையும் பாவமும் உங்களையும் உங்கள் குருவென்போரையும் துளைத்துக்கொண்டு மேலே நிற்கும் இருளையும் பார்க்கிறீர்கள். கால சக்கரத்தின் தூதாக ப்ரிட்டிஷ் ஜாதி இந்தியாவிற்கு வந்திருக்கு மிந்தக்காலத்தில் எத்தனை சாஸ்திர மூட்டைகளும் பிரயோஜனப்படாது என்பது முணர்ந்தீர்கள் எந்தெந்த ஜாதி தனக்குப்பலமென்று கருதிய மூறமை அவரவர்கட்கு துர்பலமாக மூண்டதும்கண்டீர்கள்உங்களுடையஜனசமூகம்கண்ணைத் திருத்தல்தூங்குதல், உண்ணுதல், குடித்தல், கலியாணம் பண்ணுதல் பாடை ஏறுதல், முதலிய சகல காரியங்களையும் பிறருடைய ஆணையின்படியே வழக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்களை சீர்திருத்தி முன்னணிக்குக்கொண்டு வர உங்களுடைய உழைப்பின் கஷ்டமும் மன உறுதியும காரியத்தின் பொருப்பும் சத்துருக்களுடைய கொடுமைகளைத்தாங்குமாற்றலும் உங்கள் தலை தாங்கும் போது கழுத்து ஒடியாமலிருக்கவேண்டும். இனியும் சொல்லுவதாயிருந்தால் உங்கள் கழுத்து அசையாமலும் ஆடாமலும் வளையாமலும் நிமிர்ந்து நிற்க வேண்டும். மல் யுத்தம் செய்கிறவன் கோதுமை, மாம்சம், பாதாம் முதலிய புஷ்டியுடைய பாதார்த்தங்களை யுண்டு தேகாப்பியாசங்களால் பிடரியை வலுவாக்கிக்கொள்ளுகிறான். இந்த ஆகாரங்களும் அப்பியாசங்களும் உங்கள் தேகத்தை வலுவறச் செய்தாலும உங்கள் காரியத்தை முடிக்க இவை வலுவற்றவை. காப்பியும், சோடாவும், ஜிஞ்செப்பியும், தயிர்வடையும் குடும்பத்தைத் துலைக்கும் கொடுநோய், காலரும் டையும் வலுவை யடையும்பிடரிக்குத் தேவையில்லை. முதலாவது தியாகம் வேண்டும். அந்த பூமியில் உங்கள் சமூகமான லக்ஷோப லக்ஷம் ஜனங்கள் இப்பொழுது மிருகங்களுக்கு சகோதரர்களான நிலைமையில் நின்று பசியால்மடிகிறார்களே என்கிற உணர்ச்சியால் அப் பூமிக்கு வேலிகட்டி அஞ்ஞானமானது கரியமேகம்போல உங்களையும் ஜனசமூகங்களையும் கவிந்து கொண்டதென்பதை நீங்கள் உணர்ந்து அது உங்களை இருப்புக்கொள்ளாமல் நித்திரையற்றவர்களாகச்செய்து இரத்தத்திற்குள் சென்று துடிதுடித்து துக்கமடைந்து அதனால் உண்டாகும் பரிதாபத் தண்ணீரை அந்தப் பூமிக்குப்பாச்சி உங்கள் பேரையும் புகழையும் மனைவி மக்களையும் வீடுவாசலையும் உங்கள் சரீரங்களையுங்கூடமறந்து ஜனசமூகங்களைக்கட்டியணைக்கும் அன்பென்னும் விதையை அந்த பூமியில் நட்டு அநேககாலமாக நீசத்தன்மையான கோட்பாடுகள் ஜனங்களிற்குப் புகட்டப்பட்டிருக்கின்றன. அவர்களுக்கு யாதொரு அதிகாரமாவது பாத்தியதையாவது இல்லை என உபதேசிக்கப்பட்டிருக்கிறது என்னும் கொடுமையை உணர்ந்த பரிதாபமும் அதைப்பரிகரிக்க உண்டாகும் தைரியமும் விடாமுயற்சியுமான எருப்போட்டு பாட்டிப் பேச்சும், பெண்கள் உத்திரமும், பூசாரிக்குறியும், புளுத சோதிட ஆசையும் புத்தியிலாமடையரால் காரிய அனுகூல தாக்ஷண்ணியமும், குருக்கள் குறுக்கும், சம்மந்திச்சாறுதலுமான புழு பூச்சி பூண்டுகள் அணுகாமல் பாதுகாத்து உலகத்தின் மாறுதல்களினாலும் அநேக ஜன சமூகங்கள் மேனோக்கித் தங்களிற்குவேண்டியதைத்தாங்களே செய்து கொண்டிருப்பதையும்

கோவையில் பிருமணீய மற்ற திருமணங்கள்.

1. கோயமுத்தூர் டவுன் 25-வது வார்டு பள்ள பரிணயத்தில் திருவாளர் கு. இராமசாமி பிள்ளை குமாரத்தி திரு காவேரியம்மாளுக்கும் திரு பெரியதம்பி பிள்ளை அவர்கள் குமாரர் இரங்கோன் ஓரியண்டல் நிட்டிங் பேக்டரி மானேஜர் திரு சுப்பிரமணிய பிள்ளைக்கும் திருவாளர்கள் ராவ்பகதூர் சி. எஸ். இரத்தின சபாபதி முதலியார் எஸ். என். பொன்னே கவுடர், பி. முத்துசாமி பிள்ளை, ஷெ வார்டு கவுன்சிலர் சண்முகசுந்திரம் பிள்ளை, பி. நஞ்சுண்ட கவுடர் வேணுகோபால் நாயுடு ராமலிங்கம் பிள்ளை முதலிய கனவான்கள் முன்னிலையில் சைலக் திருவாளர் சிதம்பரம் முத்துகருப்பக் குருக்கள் அவர்களால் சைவ விதிப்படி அதி விமரிசையாக சென்ற 27-5-27ந் தேதி இரவு 2-மணிக்குமேல் 2-48க்குள் நடந்தேறியது (மேற்படி காரியத்திற்கு காரண கர்த்தராக விருந்தவர் திரு முத்துசாமி பிள்ளை அவர்கள் முனிசிபல் கவுன்சிலர்!

கோயமுத்தூர் டவுன் 24 வார்டுவை வீதியில் திரு கோந்தராஜலு நாயுடு குமாரத்தி திரு கண்ணம்மாளுக்கும், திரு காலஞ்சென்ற பாரஸ்டு ரேஞ்சர் ராமசாமி நாயுடு அவர்கள் குமாரன் திரு ஆர், எ. துரைராஜ் நாயுடுக்கும் 1-6-27உ காலை 9-30 மணிக்குமேல் 10-30 மணிக்குள் திரு ராமகிருஷ்ண (நாயுடு) தாஸரால் அதிவிமரிசையாக திருமணம் நடந்தது. கடவுள் கிருபை புரிவாராக. கோ. சு கந்தசாமி கவுண்டர் எழுதுகிறார்.

ஆராய்ச்சிபண்ணி அதிலுண்டாகும் நிச்சய சந்தோஷத்தால் இம்மரம்வளர்ந்து வளர்ந்த அம்மரம் பழயதைப் புதியதாகவும் பலமற்றதை பலமுடையதாகவும் அவமானத்தை மாட்சியுடைய வெற்றியாகவும் செய்யக்கூடிய உங்கள் முன்னோர்களின் சமத்துவமான வீர ஆண்மையின் உதயகாலக்கனிகாய்த்துப் பழுக்கும். அதை உண்டீர்களானல் அந்த ஆகார அப்பியாசத்தினாலேதான் உங்கள் பிடரி வலுவடையவேண்டும். அப்பொழுதுதான் பார்ப்பனரல்லாத உங்கள் சமூகத்தைத்தாங்கும்தோளாற்றலுடைய வல்லமையும் பூரணயோக்கியதையும் சுருசுருப்பும் சிரத்தையும் உள்ள ஆண்பிள்ளைகளான வாலிபவீரர்களாவீர்கள். இருதயத்தில தன்னலம் பாராட்டும்குணமிருக்கும் வரையிலும் எந்த வாலிபமும் பிரயோஜனப்படாது. தன்னலமில்லாத உத்தமர்கள் நிறைந்த சங்கங்கள் எந்தக்காலத்திலும் எடுத்தகாரியத்தை முடித்ததில்லை. ஜஸ்டிஸ் கட்சியில் தன்னலமறுத்த மேதாவிகள் குறைந்திருந்தபடியால்தான் அநேக விரோதத்திற்குஆளாயிற்று.சீவிவாரிச்சிங்காரித்து ஆடம்பரமான ஆடையணிந்து தன் நிலைக்கு மேல் வீணாகத் தன்னைச்சேர்த்து நடப்பதால் புறத்திலிருந்து உங்கள் மீது இடைவிடாமல் அவமானமும் கஷ்டமும் பட்டு பட்டுத் தீண்டலாயிருப்பதைச் சுத்திபண்ணிக்கொள்ள முடியுமா? இதைப்பற்றி உங்களுக்கு அதிகம் எழுதவில்லை. உங்கள் வாழ்க்கையிலுள்ள அனவசியமானசெலவுகளைக் குறைக்க வேண்டும். அவசியமில்லாததைப் பெருமைக்கு உபயோகப்படுத்தி இப்பொழுது அவசியமாக ஆகிவிட்ட செலவு அநேகமென்பது உங்களுக்கு தெரியும்.

வரவேற்புப் பத்திரம்

தெய்வத்திருவழகும், செயற்கைப் பொலிவழகும்
ஒருங்கே யமைதலான் ஒள்ளொளி பரப்பும்
திருமந்திர மெனும் திவ்விய நகரிற்
பல்வகையோரும் பாங்குட னமைந்துறும்.

வாலிப ஒற்றுமைச் சங்கமதனின்,
முதலாம் ஆண்டு முடிவுவிழாவின்

அவைத் தலைமையினை அன்புட னேற்கும்
ஓங்கும் உறுதியும் உலப்பிலா ஊக்கமும்
ஏனய நலன்களும் இலங்குறு முயர்திரு

திவான் பஹதூர்.
எஸ். குமாரசாமி ரெட்டியார்
B. A., B. L., M. L. C.
அவர்களுக்கு வாசித்தளித்த
வரவேற்புப்பத்திரம்.

"நகுதற் பொருட்டன்று நட்டல், மிகுதிக்கண் மேற்சென்றிடித்தற் பொருட்டு" என்னும் பொய்யில் புலவர் பொன்னுர் மொழியை ஆதாரம்கொண்டு "நண்பரேயாகிலும் ஆகுக; அன்றி, ஏதலாயினும் ஆகுக; அவர் தம்சொல்லும் செயலும் கேடு சூழ்வதாயின், அன்னரை யாம் அஞ்சாது கண்டிப்போம் என நெஞ்சத்துறுதி யோங்க நானிலம் ஏகி நற்றொழில் புரிவதில் முன்னணி நிற்கும் மூதறிவாள! வருக! வருக!

மாணவர் நிலையினை மனமிசைக்கொண்டு, அன்னவரைக்காக்க ஆர்வம் பூண்டு "இந்து காலேஜ்" கல்விக்கழகம், அமைத்து அதனைப் பன்னெடு நாளாய் பரிபாலனம் செய்த பெரியார் பலர் ஆவிநீப்ப அன்னவர் கொள்கையை ஏற்று கண்காணித்துவரும், காரிய தரிசியே! வருக! வருக!

நிலமிசை வாழும் அனித்திய வாழ்வினில் தாணியிற்றாழ்ந்தோர், பஞ்சமர் என்றும் அயலார் என்றும், அடிமைகள் என்றும், எங்ஙனும் பரவிய அன்புருக்கடவுள், மன்னுயிர் காக்க மனமிசைக்கொண்டு மகிழும் பதியினுள், அன்னர் ஏகுதல் அறனன்றென்றும், நாய்களும் பேய்களும், நடக்கும் பாதையில் அன்னர் நடத்தல் ஒண்ணுதென்றும், இன்னும் பலப்பல இன்னல்கள் இழைத்து தாழ்த்திச் செல்லும் தருணமஃதினில் அவர் நிலையதனை அகத்திடைக்கொண்டு அறிவிலா அந்தக் கொள்கையை யொழிக்கச் சித்தம் கொண்டசிகாமணிவள்ளால்! வருக! வருக!

ஆண்டவன் அமைத்த அவனியின்கண்ணே, தலைவர் அற்ற தேசங்கள் யாவும் தாண்டவமாடும் பான்மை நோக்குழி, நாமும் அந்நிலை எய்தாதிருப்ப, இருமூன்றுண்டாய், தலைமைப்பதவியை யாவரும் போற்றிடும், பான்மையிற் காத்த வள்ளால்! வருக! வருக!

திரைகடலோடியும் தேடிய தனத்தைப் பண்டை மக்கள் நற்பணியினுக்களிக்க தனதாக்கொண்ட மடாதிபதிகள், மாண்புறும் வினைகளை ஆழ்கடற்போக்கி, புன்வினைகொண்டு புகழிலராகி, தலைவால் தெரியாது தாண்டவமாடக், கொலைகளும் பழிகளும் அதனுல் நடப்ப எங்கும் மடங்களின் நிலைமையும் கெடவே, இந்து மதமே போயிற்றென்ன யாவருமேங்கி இருக்குங் காலையில் மத பரிபாலன மசோதா வொன்றைப் பனகாலரசர் பாங்குடன் கொணர, அஃதினைத் தாங்கள் ஆதரித்திடவே அதனுற்குரோதம் கொண்டதோர் சாரார் பொய்ப்பிரசாரம் செய்வதைப் பார்ப்புழி, மதத்தின் பெருமையை நிலையுறச்செய்ய, நற்பிரசாரம் செய்தேவந்த நன்னேக்குடையோய்! வருக! வருக!

தேன்சுவை பொழிந்த தென்றமிழ்மொழியினை, காலக்கேட்டால் நம்மவர் மறந்து, பின்னர் அஃதினைப்பேணச் செல்லும் காலையில் இற்றைக் கழகம் இடங்கொடாதிருப்ப, மற்றோர் கழகம் அமைப்பான் வேண்டி, தமிழ்ப்பல்கலைக் கழக கமிட்டியில் தானம் ஒன்றினை தனதாக்கொண்ட சென்னை சட்டசபை வீற்றிருக்கும் சற்குணநிப! வருக! வருக! வாழ்க! வாழ்க! நீடுழி வாழ்க!

வாலிப ஒற்றுமைச் சங்கத்தார்,
தூத்துக்குடி.

நாம்கண்ட கனவு

தற்காலமுள்ள தேசியத்தலைவர்களில் சிலருடைய அயோக்கியமான நடக்கைகளைச் சிந்தித்துக் கொண்டே ஒரு நாள் உறங்கி விட்டேன். இயற்கை யழகுமுழுதும் நிறையப்பெற்ற ஓர் வனத்தில் மகாத்மா ஒருவர் வந்து தங்கியிருப்பதாக அறிந்து அவ்விடம் சென்றேன். அதேசமயம் என்னைப் போன்றே கதர் உடைதரித்த மற்றொரு மனித உருவம் அந்தமாதவரின் முன்னின்று வணங்கியது. உடனே அவர் வந்த உருவத்தை நோக்கி "எட்டி நில்" வஞ்சக உருவத்தோடு யாரும் என்னருகில் வரமுடியாது உண்மை உருவத்துடனேயே அருகில் வரவேண்டும். கேழ்க்கும் கேழ்விகளுக்கு உள்ளத்திலுள்ள உண்மையான பதிலே வெளிவரவேண்டும் மறைத்துக் கூறுவாயாயின் உன் தலைவெடித்து விடும்" என்று கூறினுர். அதற்கு வந்த உருவம் மிக நடுக்கமுற்று வெட வெடத்துப்போய் உடலில் வெயர்வை ததும்ப "அப்படியே யாகட்டும்" என்று கூறிற்று.

கேழ்வி:—நீயார்?

பதில்:—நான் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டித்தலைவன். அகில இந்திய சுயராஜ்யக்கூட்டத்தலைவன். சென்னைமாகாணக் காங்கிரஸ் கமிட்டித்தலைவன், சென்னை மாகாண சுயராஜ்ய கமிட்டித்தலைவன், சென்னை மாகாண இரகசிய பிராமணக் கமிட்டித்தலைவன் அகில இந்திய பார்பன ஆழ்ச்சிக்கமிட்டித் தலை............

கேழ்வி:—போதும், போதும் நிறுத்து உன்னைப் பெற்றதினுல்தான் இந்தியா இவ்வளவு பெரியபாக்கியத்தை அடைந்திருக்கிறது என்பது தெரிகிறது. உலகத்திலேயே எந்தநாட்டிலும் எந்த தேசியத்தலைவர்களும் இதுவரை சொல்லியிரா உபதேச மொழிகளில் நீ சொன்னது என்ன;

பதில்:—ஒருவரும் பத்திரிகைகளை படிக்கக்கூடாது என்று சொல்லியிருக்கிறேன்.

கேழ்வி:—பேஷ்: சரியான உபதேசம், ஏன் அப்படிக் கூறுகிறுய்?

பதில்:—எல்லாப்பத்திரிகைகளும் என்னைத்திட்டுகின்றன.

கேழ்வி:—மற்றொரு அருமையான உபதேசம் என்ன?

பதில்:—ராஜீய வாதிகள் பத்திரிகைகளை நடத்தக்கூடாது என்றும் பத்திரிகை நடத்துகிறவர்கள் ராஜீயவாதிகளாயிருக்கக்கூடாது என்றும் கூறியிருக்கிறேன்.

கேழ்வி:—நல்ல உபதேசம், அப்படியானுல், ஸ்ரீமான் அரங்கசாமி ஐயங்கார் காங்கிரஸ் காரியதரிசி பதவியை விட்டு விடப் போகிறுரா? அல்லது "சுதேசமித்திரன்" ஆசிரியர் பதவியை விட்டு விடப்போகிறுரா?

பதில்:—இல்லை, யில்லை, அந்தப்பத்திரிகை என்னைத்திட்டுவதில்லை. அதைத்தவிர மற்றப்பத்திரிகைகளைப் பற்றியே கூறினேன்.

கேழ்வி:—மற்றப் பத்திரிகைகளும் ராஜீயவாதிகளும் ஏன் திட்டுகிறுர்கள்?

பதில்:—நான் அவைகளுக்கெல்லாம்பணம் கொடுத்து வந்ததை இப்பொழுது நிருத்திவிட்டேன், அதனுல்தான் திட்டுகின்றன.

கேழ்வி:—அப்படியானுல், "சுதேசமித்திர"னுக்குமட்டும் பணத்தை இன்னும் நிருத்தாமல் கொடுத்து வருகிறீரோ?

பதில்:—சுவாமிகள் மன்னிக்க வேண்டும்.

கேழ்வி:—"முட்டுக்கட்டை", "முட்டுக்கட்டை" என்று ஒட்டுப்பெறுங் காலத்தில் ஊளையிட்டீர்களே ஏன் "முட்டுக்கட்டை" போடவில்லை.

பதில்:—நாங்கள் போட்டு வருவதுதான் முட்டுக்கட்டை அதற்குமேல் எப்படிப்போடமுடியும்? முட்டுக்கட்டை யென்றுல் சட்டசபைத்தலைவரின்மேல் இங்கிப்பெட்டியை எடுத்து அடிப்பதா?

கேழ்வி:— இரட்டை ஆட்சியை ஏன் ஒழிக்கவில்லை?

பதில்:—ஒழித்துவிட்டோமே. இரட்டை ஆட்சி என்றுல் ஜஸ்டிஸ் மந்திரிகளும் நாங்களும் ஆளுவதுதான் இரட்டை ஆட்சியாகும். இப்பொழுது அதை யொழித்து, நாங்களேயினும் மந்திரிகளைக்கொண்டு ஏகபோகமாக ஒத்தையாட்சியை நடத்துகிறோம்?

கேழ்வி:— நல்ல பதில் சுயராச்சியம் ஏன் இன்னும் வரவில்லை?

பதில்:—சுயராஜ்யம் என்ன? செப்படி வித்தைக் காரன் மாமரத்தை உண்டாக்குவது போலவா? மெல்லமெல்லத்தானே கிடைக்கும்.

கேழ்வி:— "தீண்டாமை" என்பதை ஏன் எழுத்தளவோடும் பேச்சளவோடும் விட்டு விட்டீர்கள்?

பதில்:— எங்கள் மனதிற்கு அது திருப்தியாய்த் தெரிந்தால் செய்கையாற்காட்டியிருப்போமே.

கேழ்வி:— அதுசரி மகாத்மா காந்தியடிகள் வக்கீல் தொழிலை விடவேண்டுமென்று கூறினுரே நீர் ஏன் விடவில்லை?

பதில்:— கல்கத்தா கார்பொரேஷனில் எனக்குக்கொடுத்த வரவேற்புப்பத்திரத்தை படித்துப்பாருங்கள். அதில் நான் வக்கீல் தொழிலை விட்டுவிட்டதாக எழுதியிருக்கிறது.

இதன் தொடர்ச்சி 12-ம் பக்கம் பாக்க

திராவிடன் பத்திரிகை ஆதரவு வேண்டும்.

அன்பு நிறைந்த ஐயா!

தேசத்தின் பேராலும், மதத்தின் பேராலும் மனு நீதியைச் செலுத்தி மக்கள் பிறவியில் உயர்வு தாழ்வு உண்டு என்று கற்பித்து பழந்தமிழ் மக்களாகிய நம்மைக் காலின் கீழிட்டு நசுக்கித் தங்கள் சமூகமே உயர்ந்தது தாங்கள் மட்டும் தான் மனிதர்கள் எல்லாச் சுகபோகங்களும், எல்லா மரியாதைகளும், எல்லா உத்தியோகங்களும் எல்லாப் பதவிகளும், எல்லாப் பெருமைகளும், எல்லோருடைய சொத்துக்களும் தங்களுக்கே உரியது என்ற கெட்ட எண்ணங்கொண்டு எல்லாவற்றையும் அநுபவித்து வருவதில் பார்ப்பனர்கள் தலைசிறந்து விளங்குகின்றார்கள். இவ்வுண்மை எல்லோராலும் அறியப்பெற்றதேயாகும். இந்தக் கொள்கைகளை நிலைநிறுத்த பார்ப்பனப் பத்திரிகைகள் நாள்தோறும் கொட்டி முழக்கி ஓலமிடுகின்றன.

இவர்களுடைய கொடுங்கோன்மைகளாகிய பித்தலாட்டம், பிரளி, வன்னெஞ்சம், சூது, மோசம், திருட்டுத்தனம், பெரும் பொய் கூறல் ஆகியவைகளை அறிவித்து நம் தமிழ் மக்களுடைய கண்களைத் திறந்து தட்டி யெழுப்பி நம்மை மனிதர்களாக்க நினைக்கச் செய்து வருகிற தினசரிப் பத்திரிகை திராவிடனேயாகும். 100-க்கு 97 பேர் வீதமுள்ள நம்முடைய பெரிய சமூகத்திற்கு இத்தகைய ஒரு தினசரிப் பத்திரிகை மிக்க அவசியம் என்பதை தாங்களே நன்கறிவீர்கள், இக்காலத்தில் இப்பத்திரிகைக்குச் சிறிது சோர்வு ஏற்பட்டிருப்பதாக நமக்குத் தெரிய வருவதால் நம்மவர்கள் ஒவ்வொருவரும் ஷை பத்திரிகைக்குச் சந்தாதாரராகச் சேர்ந்தும், பெரும் பொருள் கொடுத்தும் ஆதரிக்கக் கடமைப்பட்டுள்ளோம்.

இதற்கு ஆக அடுத்துவருகிற ஜூலை மாதம் முதலில் திருச்சி முனிசிபல் பப்ளிக் ஹாலில் திருவாளர் ஈ. வெ. ராமசாமி நாயக்கர் முன்பாக மூன்று நண்பர்கள் (Three friends) என்ற ஒரு அருமையான தமிழ் நாடகத்தை திருச்சி பார்ப்பனரல்லாத வாலிபர்களைக் கொண்டு நடத்த எண்ணியுள்ளோம். அதில் வருலாகிற தொகை பூராவும் "திராவிடன்" பத்திரிகையின் ஆதரவுக்காகவே கொடுக்கப்பெறும் என்பதை அறிவித்துக்கொள்ளுகிறோம். நம்மவர்களின் முன்னேற்றத்தில் பெரிது கவலைக்கொண்டுள்ள ஒவ்வொருவரும் தங்களால் கூடிய பொருள் உதவி செய்தும், சந்தாதாரராகச் சேர்ந்தும், நாடகத்தின் டிக்கட்டுகளை விற்றுக் கொடுத்தும் ஆதரிக்கவேண்டுமாய் மிகவும் கேட்டுக்கொள்ளுகிறோம்,

தங்களன்பிற்குரிய
ஜூப்லி சகோதரர்கள் சங்க அங்கத்தினர்.

டி. சி. தங்கவேலு பிள்ளை பி. ஏ., (Bar-at-law) தெ. இ. ந. உ. சங்கத்தலைவர். டி. வ. ஜி. ரத்தினம் பி. ஏ. எல். எல். பி. பார்ப்பனரல்லாத வாலிபச் சங்கத்தலைவர், ஏ. சிவப்பிரகாசம் பிள்ளை தமிழ் ஆசிரியர் சூசையப்பர் கல்லூரி. சி.பி. இராஜகோபால் நாயுடு, நாயுடு மகாஜனசங்கத தலைவர். பெரியசாமிப்பிள்ளை, முத்திரியர் மகாஜன சங்கத் தலைவர் பி. சுந்தரராஜு பண்டிதர் மருத்துவ குல சங்கத்தலைவர். தி. பொ. வேதாசலம் பிள்ளை பி. ஏ, பி, எல். இராமமந்திரம் தென்னூர் திருச்சி. ஆறுமுகம் பிள்ளை, தொழிலாளர் சங்கம் காரியதரிசி. எஸ். ஆறுமுகம் தமிழர் கூட்டுறவுச் சங்கக் காரியதரிசி ஆர். ரெங்கசாமி, 17-வது வார்டு வரி செலுத்துவோர் சங்கக் காரியதரிசி கி. ஆ. பெ. விசுவநா பிள்ளை, மணிவாசக தமிழகம், திருச்சிராபள்ளி.

எமது சிறுயாத்திரையும் சில அநுபவங்களும்

யானும் எனது மாணவ நண்பர்கள் எண்மரும் கூடிச், சென்ற 15-5-1927 தேதி திரு அவிநாசியில் சைவத்திருவாளர் கருணாலய முனிவர் அவர்களது புது நந்தனவனத்தின்கண் நடைபெற்ற அவிநாசியப்பன் வசந்தத் திருவிழாவைக் கண்ணுறும்பொருட்டுச் சென்றோம்.

நறுமணங்கமழும் பல்வகை மரங்களும் செடிகொடிகளும் அணி அணியாக நின்று வானுற நிவந்து மாதிரமணைந்து விளங்கும் அத்திரு நந்தனவனத்தின்கண் திரு அவிநாசியப்பரும் பெருங்கருணையம்மையும் கொண்ட திருவிழாக் கண்குளிரும் காட்சியுடையதாக இருந்தது.

அபிஷேக ஆராதனைகள் நடந்து முடிந்த பின்னர் ஓய்வு நேரங்களில் சங்கீதக் கச்சேரி முதலியன நடந்தன. அவை மிகவும் இனிமையுடையனவாக இருப்பினும், பெரும்பான்மையும் வடமொழியும் தெலுங்கும் நிறைந்த பாடல்களாகவே இருந்தன. இத்தகைய நற் திருவிழாக்களில் இச் சங்கீதக் கச்சேரிகளைவிட நம் சைவசமய குரவர்களால் அருளிச்செய்யப்பட்ட தேவார திருவாசகங்களில் வல்லவராகிய ஓதுவார் மூர்த்திகளைக் கொண்டு பாராயணம் செய்வித்தலே சிறந்தது என்பதை நம்மவர்கள் இன்னும் அறியாமலிருக்கின்றனர்.

அதுநிற்க. யாங்கண்ட சில பார்ப்பனர்களின் அடாத செயல்களை மொழிகின்றேம்.

எங்களில் ஒருவர் அவிநாசியில் நாகர் பிரதிட்டை செய்யவேண்டியிருந்தது. அதற்காக அவநாசியில் இருக்கும் கோயில் அர்ச்சகரும், பெரிய சைவ அபிமானிபோல் நாடகம் நடிப்பவருமாகிய ஒரு பார்ப்பனரிடம் ஐந்து ரூபாய் முன்பணம் ஒரு மாதத்திற்கு முன்னமே கொடுத்து, நாகர் உருவச்சிலை செய்வித்து நீரிலிட்டுவைக்குமாறு ஏற்பாடு செய்திருந்ததில், அவ்வருச்சகர் அங்ஙனம் செய்யாமல் பணத்தை இருமனைப் பெண்டிர் கவறு முதலியவற்றிற்காகச் செலவிட்டுவிட்டு, பிரதிட்டை செய்யவேண்டிய நாளில் ஒளிந்துகொண்டார். பின்னர் சிற்பிகளிடத்தில் புதிதாக ஒரு உருவச் சிலை வாங்கிப் பிரதிட்டைசெய்ய நேரிட்டதல்லாமல் மிக அலைச்சலும் காரிய இடையீடும் நேரிட்டது.

இப் பார்ப்பனர்கள், இதுபோல் நாகர் முதலியன பிரதிட்டைசெய்ய விரும்புவோரிடத்தில், தாங்களே சிற்பிகளைக்கொண்டு செய்வித்துக் காரியங்களை ஒழுங்குற முடித்துக் தருகிறோம் என்று பல உபசார வார்த்தைகளைச் சொல்லிப் பணத்தைப் பெற்றுக்கொண்டு "திரு நீக்கப்பட்டார் தொடர்" புகளை செலவிட்டுவிட்டுப் பின்னர், முன்னமேயே பிரதிட்டை செய்யப்பட்டிருக்கும் நாகர்களைப் பிடுங்கிக் கிணற்றிற் போட்டு வைத்திருந்து பணங்கொடுத்தவர்களை யேமாற்றிப் பிரதிட்டை செய்கிறார்கள் என்று பலரால் யாம் கேள்வியுற்றோம். இவர்கள் தம்மை ஆதிசைவர்கள் என்றும் உயர் குலத்தோர் என்றும் வாயாரச் சொல்லிக்கொண்டு இத்தகைய பொய்யும் வஞ்சகமும் கொண்டு ஆறலைப்போர்போன்று ஒழுகுதல் "நெல்லினிற் பிறந்த பதராகும்மே" என்ற முதுமொழியை விளக்குதற்பொருட்டே போலும் "இழுக்கம் இழிந்த பிறப்பாய்விடும்" என்பதை அத்தகையோர் இனியேனும் உணர்வார்களாக.

இன்றேல் அவர்களது குலத்தின்கண் ஐயுற நேரும். பின்னர் அவிநாசிக்கடுத்த சேவூர் என்னும் திருத்தலத்திற்குச் சென்றோம். அங்குள்ள கோவில் அருச்சகர் யாது காரணத்தாலோ எங்களுடன் மிகவும் வெடுவெடுப்பாகவே பேசினார். யாங்கள் அத் தலத்து அம்மனுடைய பெயர் யாதென வினவியதற்கும் தமக்குத் தெரியாதென்று சொல்லிவிட்டார்.

ஊருக்கு நாங்கள் திரும்பிவருகையில் புகைவண்டியில் உட்கார்ந்திருந்த ஒரு பார்ப்பனச் சிறுவன், அதே வண்டியில் அருகிலிருந்த ஒரு தமிழ அம்மையிடத்திற் சென்று "ஹேய் ஹேய் இந்தச் செம்பை அப்புறம் எடுத்துவை யென்றான். அவ்வம்மையார் என்ன ஐயா நீ வண்டிக்காரனைப் போல் ஹேய் ஹேய் என்கிறாயே என்றார். அதற்கு அச்சிறுவன்" உன்னை ஹேய் என்னாமல் அம்மா என்னவேண்டுமோ என்றான். அதற்கு அவ்வம்மை நீ பெண்ணை யம்மா என்னவும் நான் உன்னை சுவாமீ என்னவும் அவசியமில்லை. மரியாதையுடன் உன் காரியத்தைப் பார் என்று அப்பார்ப்பனச் சிறுவனுக்குச் சில சூடான பதார்த்தங்கள் கொடுத்த பின் அவன் கொட்டம் அடங்கிற்று. போலிப் பார்ப்பனருக்கு வஞ்சகமும் கோபமும் செருக்கும் மிக உறவாக இருக்கின்றன.

பார்ப்பனர் வன்னெஞ்சும்
வேளாளர் நன்னெஞ்சும்.

எமது குழாம் கோயமுத்தூர் அடைவதற்காக புகைவண்டியை எதிர்பார்த்துக்கொண்டு மங்கலத்தில் புகைவண்டி நிலயத்தில் உள்ள தங்கும் அறையில் [Waiting Room]ல் நெருக்கமாகவும் புழுக்கமாகவுமிருந்ததால் பின்புறமிருக்கும் நிலயத்தலைவர் மனையின் முன்னருள்ள மரநிழலில் உட்கார்ந்திருந்தோம். சற்று நேரத்திற்கெல்லாம் அம் மனையிலிருந்து ஓரம்மையார் வெளியில்வந்து "இங்கே இருக்காதீர்கள் இது ஸ்டேஷனல்ல, என்றார் அப்புறம் செல்க என விரட்டினார். வெயிலின் கொடுமையால் "ஆசை வெட்க மறியாது" என்பதற்கிணங்க யாங்களும் அங்கேயே உட்கார்ந்திருந்தோம். பின்னர் அவ்வம்மையார் சொல்லிய போலும் உள்ளேயிருந்து ஐயா ஒருவர்வந்து வெகு கடுகடுப்போடு அம்மையார் படித்த பாடத்தையே பின்னும் படித்தார். அதற்கு யாங்கள் வெயில் அதிகமாக இருப்பதாலும் நிலயத்தில் அதிக புழுக்கமாகவு மிருப்பதாலுந்தான் இந்த நிழலிலிருக்கிறோம் வண்டி வந்தவுடன் போய் விடுகிறோம் என்று விடை கொடுத்துவிட்டு சிறிதுபோது அங்கேயிருந்துவிட்டுப் பின்னர் வண்டி வந்த பின் புறப்பட்டோம். இதற்கு முற்றிலும் மாறானசெய்தியொன்று ஒரு வேளாளரிடத்திற் கண்டோம் சேவூரிலிருந்து நாங்கள் அவிநாசிக்கு கொடிய வெயில நேரத்தில் கால் நடையாகத் திரும்பி வருகையில்மிகவும்களைத்துப் போய் ஒரு வேளாளரது களத்துச்சாலைக்குச் சென்றோம். அவர் பன்னெடு நாட்பழகியவர் போன்று எங்களை வரவேற்று உபசரித் துக்குடிக்க நீரும் இருக்க இடமும் கொடுத்தது "காலத்தினாற் செய்த நன்றி ஞாலத்தின் மாணப் பெரிதாக இருந்தது இவ்விருவரில் யாவர் உயர்குலத் தவர்? என்பதை இறைவனே யறிவன்.

"பார்ப்பாரகத்தை யெட்டிப் பாரோமே
காப்பாரே வேளாளர் காண்" [யெங்காளுங்

தமிழ்நாடும்பார்ப்பனரும்

சேலம் வக்கீல்

ஸ்ரீமான் கி. அனந்தாச்சாரியார் எழுதுகிறார்.

தமிழ்நாட்டிலுள்ள பார்ப்பன வகுப்பினர் ஆரிய நாட்டிலிருந்து ஈண்டுக் குடியேறினவரென்றும், அவர்களுடைய பழைய நாகரீகமும் மதமும் கல்வியும் பயிற்சியும் தமிழ்நாட்டில் கலந்துபோய் இப்பொழுது ஒன்றினின்றும் மற்றொன்றைப்பிரித்துச் சொல்ல வியலாமிருந்தபோதிலும், ஆரியர்களுடைய தரும சாஸ்திரங்களென்று சொல்லப்படுகிற ஸ்மிருதி நூல்களும் அவர்களுடைய சமூகக்கட்டுப்பாடுகளும் இந்நாட்டிலுள்ள பார்ப்பனரல்லாத மக்கட்குச்சிறிதும் பொருந்தாவென்றும் கருதப்பட்டு வருகின்றன. இக்கொள்கை ஆராய்ச்சி அளவில் சரியானதென்று ஏற்பட்டு வருவதாகும். ஆரியர்களுடைய பண்டை நூல்களிலும் பிற்றைப் புராணங்களிலும் ஆரியா வர்த்தம் அல்லது ஆரிய நாடென்பது இமையமலைக்குத் தெற்கிலும் இருகடல்களுக்கு மிடையிலும் விந்தியமலைக்கு வடக்கிலுமுள்ள நிலப்பிரிவேயென்று சொல்லியிருப்பதும், மற்ற தேசமெல்லாம் அசுத்தமான மிலேச்ச அதாவது அன்னிய நாடென்று கூறியிருப்பதும் இதை முற்றிலும் வலியுறுத்துவனவாயிருக்கின்றன. ஆனல் தமிழ் நாட்டிற் குடியேறின பார்ப்பனர் நாளடைவில், தமிழ் நாட்டினர் நாகரீகமும் மேன்மையும் வாய்ந்த ஒரு தனிக்கூட்டத்தினரென்பதை மறந்து அவர்களைத்தங்களுடைய சாஸ்திர ஒழுங்குகளுக்குட்பட்டவராகக் கருதி, அவர்களிற் சிலரை வைசியராகவும் ஏனையோரை சூத்திரராகவும் நடவடிக்கையில் பாகுபடுத்தி நடத்தி வந்திருக்கின்றனர். இப்பாகுபாடு தமிழ்மக்களிற் சிறந்தோரால் ஏற்றுக்கொள்ளப்பட்டதாய் கொள்ளுதற்கில்லை. இன்றளவும் தமிழரிற் சைவராவார் பார்ப்பனரை உயர்ந்தோராகப் போற்றாமலும் அவர் தீண்டியதை யுண்ணாமலும் ஒழுகி வருவதைப் பார்க்கிறோம். ஆனல் சாதாரண மக்கள் இக்கட்டுப்பாட்டுக் குடன்பட்டுப் பார்ப்பனருக்குக் கீழ்ப்படிந்து நடந்துவந்திருக்கின்றனர். இவ்வளவில் நில்லாமல், இவர்கள் க்ஷத்திரிய வைசிய பதவிகளுக்காகத் தமக்குள் போட்டி போட்டுக்கொண்டும் பலவகைத்தான புராணச் சான்றுகளைப் பற்றிக் கொண்டும் வந்திருக்கின்றனர். ஆரிய நூல்களில் ஒரு ஜாதி மற்றொருஜாதியுடன் கலப்பதினல் சங்கர ஜாதி உற்பத்தியாகிறதென்று சொல்லியிருப்பதால், பார்ப்பனரும் தமிழரும் ஒன்று சேர்ந்து இந்நாட்டு ஆதிகுடி மக்களைப் பஞ்சமரென்றழைத்து இப்பகுதியையும் பூர்த்தி செய்தனர்.

* * *

ஆரியருடைய ஜாதி முறையானது அது தோன்றிய போழ்தும், பின்னர் நெடுங்காலமும் அவசியமரிந்ததேயாயினும், அஃது இக்காலத்துக்கொவ்வா தென்றும் தேச ஒற்றுமையைக் கெடுப்பதென்றும், அதைத்தொலைப்பது இயலாதாயினும் அதன் முறைகளைத் திருத்தியமைப்பது அவசியமென்றும் பல ஆன்றோர்களால் கருதப்பட்டுவந்திருக்கின்றன. இக்கருத்துக்கிணங்க நமது தேசத்தில் ஆங்காங்கு ஆசார சீர்திருத்தச் ஜனங்கள் அமைக்கப்பெற்று இயங்கி வந்தன. தமிழ்நாட்டினரும் இவ்வித திருத்தங்களின் பயனக இங்கு காணப்படும் உயர்வு தாழ்வுகளும் மற்ற முறைகளும் மறைந்துவிடுமென எதிர்பார்த்து வந்தனர் ஆனல் இவ்வியக்கம் நாட்டில்நிலைக்கவில்லை. தனிப்பட்ட மனிதர்களைத்தவிர எச்சமூகமும் இதன் கொள்கைகளில் ஈடுபடவில்லை. இவ்வியக்கம பொதுஜன சமூகத்தைக் கைப்பற்ற வேண்டுமென்கிறமுறையில் நடத்தப்பெறவுமில்லை. இதில் ஈடுபட்டிருந்தவர்களும், காலப்போக்கில், ஊக்கம் குறைந்து தம்முடைய மனைவி குழந்தைகளையும், சுற்றத்தினரையும் வியாஜமாகக்கொண்டு இதைக் கைவிட்டனர். சில்லரைப் பிராயச்சித்தங்களினுதவியால், அவர்கள் தத்தம் சமூகத்தினரோடு ராஜியும் செய்துகொண்டனர். இப்பொது அவ்வியக்கத்தின் அடிச்சுவடும் காண முடியாமற் போய்விட்டது.

* * *

இவ்வாறிவ்வியக்கம் பொறியற்று வீழ்ந்ததும் தமிழ் நாட்டு மக்கள் பெருத்ததோர் ஏமாற்றத்தை யடைந்தனர். தமிழ் நாட்டில் பார்ப்பனர் உயர்ந்தோரெனப் போற்றப்படுதற் கெத்துணையாதரவுமில்லை என்பது வெளிப்படை. அன்னரும் தங்களுடைய ஜனத்தொகைக்கும் தொழிலின் முறைக்கும் ஏற்றவளவுக்குப் பன்மடங்கதிகமான சலுகையும் செல்வாக்கும் அதிகார வர்க்கத்தாரிடத்தும், பொது மக்களிடையும் அடைந்துவாழ்ந்து வந்தனர். பார்ப்பனரில் பொது நன்மைக் குழைத்தார் பலருளரேனும் அன்னர் பொது நலத்துடன் தஞ்சுயநலத்தையும் கருதாமற் போகவில்லை. அன்றியும் கைம்மாறு வேண்டாது பொதுக்கடமையாற்றுவோரிடத்தும் இவ்வன்னிய வரசாங்கம் சுயநன்மைப்பயன் நல்கும் தத்துவமும் உணரப்பட்டது. இவ்வுண்மைகளை ஆழவறிந்த பார்ப்பனரல்லாரிற் சிலர் தமிழ்நாட்டில் பார்ப்பனவாதிக்கத்தை யொடுக்க முன் வந்தது எவ்வாற்றானும் வியக்கத்தக்கதன்று.

* * *

பார்ப்பனரல்லாதாரின் இவ்வியக்கம் தோன்றி இன்றைக்குப் பத்தாண்டாயின. இஃது உண்டான காலை இதற்கு வெளிப்படையாக ஆதரவளிக்கப் பல தமிழர் அஞ்சினர்: ஆனல் இது தன்னுடைய கொள்கைகளின் மெய்ம்மையால் நிலையுற்றது. இதுபோதும் அறிவும் சுயமரியாதையும் வாய்ந்த தமிழரில் இதைப் போற்றாதார் யாருமிலரென்று சொல்லுதல் மிகையாகாது. ஆனல் சிலர் இதற்கு அரசியல் அமைப்பு இழுக்கென்றும், இன்னுஞ் சிலர் இதன் அரசியல் முறை பிற்போக்கான தென்றும் குறை கூறுவர். இவ்வியக்கத்துக்கு அரசியல் பற்றில்லாவிடின் இது வேறற்று சாய்ந்துவிடுமென்பது அறிவுடையோர் அறிந்ததாகும். மற்றும் இதனுடைய அரசியல் முறைகள் சீக்கிரத்தில் சீர்மை பெறுமென கருதத்தகுந்த காரணங்கள் இருக்கின்றன. இப்பொழுதும் இவ்வியக்கத்தைக் குறைகூறிப்பார்ப்பனவாதிக்கத்தை விரும்புவோர், பிரிட்டிஷ் அரசாட்சியின் மீதுள்ள மோகத்தால் அது நீங்கின நமது தேசம் உயிர் நிலையற்றுச் சீர்குலைந்து விடுமென்றெண்ணும் அடிமைத்தன்மை வாய்ந்த நம்முடைய மற்ற சகோதரர்களையே ஒப்பாராவர்.

* * *

இவ்வியக்கம் பார்ப்பனரைச் சுட்டியெழுந்ததாதலின், இதன்பால் பார்ப்பனர் எங்ஙனம் ஒழுகி வந்திருக்கின்றன ரென்பதைக் கவனிப்பது மிகையாகாது. பார்ப்பனச் சமூகம் இவ்வியக்கத்தை இதுகாறும் பொருட்படுத்தாமலும் உதாசீனித்தும் வந்திருப்பது மிகவும் விசனிக்கத்தகுந்தாகும் பார்ப்பனரல்லாதாருக்குச்சமூக வாழ்க்கையில் பலவகைக்குறைகள் இருக்கின்றன வென்பதை எவரும் மறுக்கமுடியாது. நமது ஆலயங்களில் எவரும் தம்முடைய ஒழுக்கத்துக்கும் பக்திக்கும் ஏற்றவாறு நடத்தப்படுகிறதில்லை. பிறப்பு காரணமாக அநேக வேற்றுமைகள் செய்யப்படுகின்றன. பார்ப்பனரல்லாதாரிற் பலர் கடவுளைப் பணிதற்குக் கூடத்தகுந்த வசதி பெற முடியாமற் போகிறது. எப்பார்ப்பனச்சிறுவனும் எத்தகைச் சீலம் வாய்ந்த பார்ப்பனரல்லாத பெரியாரையும் சூத்திரனென்று அழைக்கிறான். பார்ப்பனரின் உதாரணம் காரணமாக வகுப்பு வித்தியாச உணர்ச்சியும், உயர்வு தாழ்வுக் கொள்கைகளும், சமூகத்தில் பலவித உட்பிரிவுகளும் பார்ப்பனரல்லாதாருக்குள் பெருகி வருகின்றன. பார்ப்பனரை உயர்ந்தோரெனக்கருதி அவர்களுடைய வழக்கத்தைப் பின்பற்றுவதால் பார்ப்பனரல்லாதாரிற் பெரும்பான்மையோர் பாலிய விவாகம், விதவைகளுக்கு மறுவிவாக மறுத்தல் முதலிய தீயவொழுக்கங்களுக்காளாகி வருகின்றனர்! தங்களுடைய சொந்த நாட்டில் தமிழர் அதிகாரமும் ஆதிக்கமும் அடைதற்கு இப்பார்ப்பனர் ஒரு பெருந்தடையாகவுமிருந்து வருகின்றனர். பார்ப்பனரல்லாதாரின் இயக்கம் வளர்தற்கு இவ்வகைக் காரணங்கள் இருக்கவும் இதனிடத்துப் பார்ப்பனர் வாளாவிருந்தது சிறிதளவு ஆணவம் பற்றியும் பெரிதும் அறியாமையாலுமென்று கொள்ளுதல் தகுதியுடைத்தாகும்.

* * *

"பார்ப்பனர்" என்னும் சொல்லும் இக்குழாத்தினருக்குச் சீற்றத்தை விளைத்ததோமென்று ஐயுறவும் வேண்டியிருக்கிறது. இச்சொல் பெரும் பொருள் கொண்டதொரு தமிழ்ச் சொல்லென்பதையும்' இது "நெடுக பார்ப்பனச் சிட்டர்கள் பல்லாண்டெடுத்தேத்த" என்பதிற்போல இலக்கியங்களில் வழங்கி வந்ததென்பதையும் இஃது ஒரு வசைச்சொல்லாகாதென்பதையும் இச்சமூகத்தனரிற்பெரும்பாலோர் அறிந்திலர்போலும். பார்ப்பனச் சமூகம் இவ்வாறு வாளாவிருந்திருக்க தனிப்பட்ட பார்ப்பனர் தங்களுக்குட் பட்ட பார்ப்பனரல்லாதாரிற் சிலரைக்கிளப்பி விட்டு நேர்முறை யல்லாது அவர் முகமாக இவ்வியக்கத்தைத் தாக்கியிருக்கின்றனர். ஆனல் வாய்மையில்லா இப்போலியர்கள் உண்மையில ஊன்றிய இவ்வியக்கத்தை யொரு சிறிதும் அசைக்கத்திறன் பெறரில்லை. தனிப்பட்ட பார்ப்பனருடைய இத்தகைய செய்கையே நமது நாட்டில் பார்ப்பனச் சூழ்ச்சி யென்று அழைக்கப்பட்டு வருகிறது' இவ்விதச்சூழ்ச்சியின் பயனக நாளும் மறுதினமும் மூலை முடக்குகளிலிருந்தெல்லாம் பார்ப்பனச் சமூகத்தைத்தாங்கிப்பேசும் "பார்ப்பனரல்லாத தலைவர்கள்" புதிது புதிதாகக் கிளம்பி வரும் காட்சியை நமது நாடு கண்ணுற்று வருகிறது. இது பொது ஜனங்களிடத்துப் பெருமயக்கத்தை யுண்டுபண்ணி அவர்களுக்குத் தேசிய இயக்கங்களிலுள்ள ஊக்கத்தையும் நம்பிக்கையையும் குன்றச்செய்கிறது.

அன்னிய ஆட்சிக்குட்பட்ட எவ்விடத்தும் வகும்புப் பூசல்கள் தோன்றுவது தேச முன்னேற்றத்திற்குப் பெரிதும் இழுக்கென்பது யாவரு மறிந்தது. ஆதலால் தமிழ்நாட்டிலுள்ள இவ்வேற்றுமையை நீக்க வழி தேடுவது இந்நாட்டுத் தலைவர்களின் முதற்கடனகும் இவ்வேற்றுமை நீங்கி ஒற்றுமை தழைக்கவேண்டுமாயின் இரு சமூகத்தினரும் குற்றங்குறைகள் யாரிடத்துளவாயினும் அவைகளைக் களைந்தொழிக்க வேண்டுமென்கிற நல்ல எண்ணத்துடன், தகுந்த பிரதிநிதிகள் மூலமாக, விவாத விஷயங்களைக் கலந்து ஆலோசித்து வித்தியாசங்களை யொருவாறு முடிவு கட்டிக்கொள்ளவேண்டும். அவ்வித ஏற்பாடுகள் நடைபெறுவதன் முன் பார்ப்பனச் சமூகத்தினர் கவனம் செலுத்தவேண்டிய சில விஷயங்கள் வருமாறு :—

(1) தமிழ் நாட்டின் பெருமை, பண்டைக்காலத்துடன் நின்ற தொன்றன்று. சைவம் பிறந்தது இந்நாட்டிலேயே. வைஷ்ணவம் வளர்ந்ததும் வ்யாஸ சூத்திரங்கட்கு மூவர் பாஷியங்கட்கும் முந்திய பாஷியங்கண்டதும் ஈண்டாகும்.

(2) தமிழ்நாட்டுச் சமூகவாழ்க்கை யமைப்பில் தமிழர் சுயநிர்ணயம் தேடுவது சாலவும் தகுதி

(12-வது பக்கம் பார்க்க)

மித்திரன் நிருபரின் அயோக்கியத்தனம்.

நமது பத்திரிகாலயத்தில் ஒரு பார்ப்பனர் சூழ்ச்சியால் இரண்டு அச்சுக் கோர்ப்போர்கள் திடீரென்று சொல்லாமல் நின்றுவிட்டதற்குக் காரணமாக கோவையில் இருந்து மித்திரன் நிருபர் ஒருவர் மிகவும் அயோக்கியத்தனமான ஒரு நிருபத்தை மித்திரனுக்கு அனுப்பியிருக்கிறார் அதாவது ஒரு விஷயத்தை நாம் அச்சுக் கோர்க்கும்படி சொன்னதாகவும் அதை அச்சுக் கோர்ப்போர் கோர்க்கமறுத்து வேலை நிறுத்தம் செய்து விட்டார்கள். என்றும் எழுதியிருக்கிறார். இது மிகவும் அல்ப ஜாதித்தனம் என்றே சொல்லுவோம் எல்லா பத்திரிகை நிருபர்களுக்கும் மானம் வெட்கம் சுத்தாத்தோட்டம் முதலிய தன்மைகள் குறைந்தது கொஞ்சமாவது இருப்பதாகக் காண்கிறோம். நமது சுதேசமித்திரன் நிருபர்களுக்கு மாத்திரம் பெரும்பாலும் இக்குணங்கள் காணப்படுவதே இல்லை. இதன் காரணமும் நமக்குத் தெரிவதில்லை. மித்திரனுக்காவது மனிதத்தன்மையும் யோக்கியப்பொறுப்பும் இருந்தால் அச்சுக்கோர்ப்போர் கோர்க்க மறுத்தது என்ன விஷயம் என்றாவது அல்லது வேறு சமாதானமாவது எழுதுவான் என்று நினைக்கிறோம்.

நமது பத்திரிகை பதிப்பகத்தில் உள்ள அச்சுக் கோர்ப்போரை கலைக்க சூழ்ச்சி செய்தது காரைக்குடியில் உள்ள ஒரு பத்திரிகை காரியாலயத்தில் இருக்கும் ஒரு பார்ப்பனர் என்று தெரிவிக்கிறோம். ஆனாலும் அதனால் பத்திரிகை வேலை குந்தகப்படாமல் நடந்தேற உதவிய நண்பருக்கு நமது வந்தனத்தை தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

ஈரோடு முனிசிபாலிட்டி.

ஈரோடு முனிசிபல் சேர்மென் ஸ்ரீமான் சீனிவாச முதலியார் அவர்கள் மீட்டிங்குகூட்டியவிதத்தைப்பற்றிசென்ற வாரம் எழுதி இருந்தோம். அதாவது சில கவுன்சிலர்கள் முனிசிபாலிடியில் •இருப்பதால் ஸ்ரீமான் முதலியாரின் நன்மைக்கும் மற்றும் சில காரியம் செய்வதற்கும் தடையாய் இருப்பதாகக்கருதி அவர்களை நீக்கிவிடவேண்டி. ஒரு மீட்டிங்கை ஒரு நாள் 5½ மணிக்கு கூட்டி. 5 மணிக்கே தான் ஆபீசுக்கு வந்து கோரம் இல்லை என்பதாக மீட்டிங்கை ஒத்தி வைத்து விட்டு வேறுயாரும் வந்து மீட்டிங்கு நடத்தாமல் இருக்கும் பொருட்டு காவலாக தாம் வெளியில் வந்து நின்றுகொண்டு இருந்ததும் கவுன்சிலர்கள் வந்து சண்டை போட்டதுமானவிஷயங்களைப்பற்றி ஒருநிருபர் எழுதியதை சென்ற வாரம் எழுதி ஒரு குறிப்பும் போட்டிருந்தோம். இப்போது அதற்கேற்றாப் போலவே இவ்வாரம் ஒரு அவசரமீட்டிங்கு போட்டு ஒரு கவுன்சிலரை மூன்று மீட்டிங்குக்கு வாராததால் அவர் நீக்கப்பட்டு விட்டதாக தானே ஏற்பாடு செய்து கொண்டு அவருக்கு நோட்டீசு தாராமல் மீட்டிங் கூட்டி விட்டார் அதற்குள் அக்கவுன்சிலர் விஷயம் தெரிந்து தானாகவே போய் உட்கார்ந்து கொண்டிருக்கையில் அவரை வெளியே போகும் படி கட்டாயப்படுத்தி வெளியாக்கி விட்டுதனது சவுகரியத்திற்றபடி இரண்டொரு தீர்மானத்தையும்செய்து பலனடைந்துகொண்டார். அது எப்படியோ இருக்கட்டும். வெளிப்படுத்தப்பட்ட கவுன்சிலர் உடனே சென்னைக்குச் சென்று ஐகோர்ட்டில் விண்ணப்பம்போட்டு சேர்மென் நடவடிக்கை சரியில்லை என்பதாக வாதாடி தாம் கவுன்சிலராக இருக்கலாம் என்பதாக உத்திரவு பெற்று வந்துவிட்டார். இது மற்ற பத்திரிகைகளில் வந்திருக்கிறது. இந்தியர்கள் சுய ஆக்ஷிக்கு அருகதை உள்ளவர்கள் என்பதும் வெள்ளைக்காரர்கள் நமது நிற்வாகத்தை மேற்பார்வை பார்க்க யோக்கியதை உள்ள தர்மகர்த்தர்கள் என்பதும் ருஜூவு செய்ய நமது மந்திரி கனம் சுப்பராயன் அவர்கள் நமது சேர்மென் ஸ்ரீமான் சீனிவாச முதலியார் அவர்கள் நமது ஈரோடு முனிசிபாலிட்டியில் உள்ள கவுன்சிலர்கள் பாதிரியார் உள்பட அவரது நண்பர்கள் அந்த ஆபிசிலுள்ள சிப்பந்திகள் நமது ஜில்லா கலெக்டர் ஸ்ரீமான் காக்சு துரை அவர்கள் ஆகிய இவர்களே போதுமான அத்தாக்ஷி ஆவார்கள் இந்தியாவின் மானகேட்டிக்கும் இந்தியர்களின் இழிதன்மைக்கும் வெள்ளைக்காரர்கள் யோக்கியதைக்கும் இதைவிட வேறு என்ன சாக்ஷி வேண்டும் ?

"சத்தியாக்கிரகம்"

ஜாக்கிரதை! ஜாக்கிரதை!! ஜாக்கிரதை!!!

நமது நாட்டில் இப்போது சில தொண்டர்களுக்கு வயிற்றுப் பாட்டிற்கு வேறுமார்க்கமில்லாததால் ஊராரை ஏமாற்றவேண்டி 'சத்தியாக்கிரகம்,' 'சத்தியாக்கிரகம்' என்று சொல்லி அவர்கள்வயிறுவளர்க்கப்பார்க்கிறார்கள். சத்தியாக்கிரகம் என்பதை விளையாட்டுப் பிள்ளைகள் மண்ணுக் கொழிக்கும் வேலைபோல நினைத்துக்கொண்டு அதன் யோக்கியதையைக் கெடுக்கும் விஷயத்தில் நம் நாட்டுத் தொண்டர் என்போர்களில் சிலருக்கு வெகு துணிவு ஏற்பட்டுவிட்டது. சத்தியாக்கிரகம் செய்யும் முன் சத்தியாக்கிரகம் செய்யவேண்டிய அவசியம்இன்னது என்பதையும் வெளிப்படுத்தி அதற்கு நாட்டினரின் சம்மதி பெற்று சத்தியாக்கிரக விஷயத்திற்கு செல்வாக்கு உண்டாக்கி அதற்குத் தக்க யோக்கியதை உள்ளவர்களால் துடங்கப்படவேண்டியகாரியம். சத்தியாக்கிரகம் செய்வது பெட்ரோல் எண்ணைக்குப் பக்கத்தில் நெருப்புபுழங்கப்படுவதில் எவ்வளவு ஜாக்கிரதையாய் இருக்கவேண்டுமே அதுபோல சத்தியாக்கிரகமென்னும் நெருப்பை உபயோகிக்கவேண்டியது. தவறினால் தோல்வி ஏற்படுவது மாத்திரம் அல்லாமல் குறிப்பிட்ட லக்ஷியத்திற்கு அழிவு ஏற்படும் என்றே சொல்லுவோம். சத்தியாக்கிரகம் செய்யத் தகுந்தவர்கள் வயிற்றுச் சோற்று வீரர்கள் அல்ல. மற்றவர்களை வைவதற்காக அய்யங்காரிடம்பணம் வாங்கி வயிறுவளர்த்திக் கொண்டிருக்கும் வீரர்களுக்கு உரியதும அல்ல என்பதை மக்கள் ஜாக்கிரதையாய் உணரவேண்டும். நாகபுரி •சத்யாக்கிரகத்திற்கு மகாத்மாவின் ஆசி இல்லை என்று தெரிந்தஉடன் ஸ்ரீமான் அவாரிக்கு 4வருஷம் கடுங்காவல் தண்டனை ஏற்பட்டுவிட்டது தமிழ்நாட்டுசத்தியாக்கிரகவீரர்களில்சிலரின் யோக்கியதை நமக்குத் தெரிந்ததே. அவர்கள் ஜெயிலில் நடந்து கொண்ட மாதிரியும் நாகபுரியில் மன்னிப்புக்கேட்டுக்கொண்டுவந்தமாதிரியும், இவைகளின் மூலம் தமிழ் நாட்டிற்கு ஏற்பட்ட அவமானமும் நாம் நேரில் அறிந்ததே. ஆதலால் வாசகர்களே போலி ஆசாமிகள் வேறுவழியில் சுய நலத்திற்கும் பணம் வசூல் செய்வதற்கும் விளம்பரம் செய்து கொள்ளுவதற்கும் கூலிக்கு மாரடிப்பதற்கும் ஆசைப்படுகிறவர்களான ஆசாமிகள்விஷயத்தில்! ஜாக்கிரதை! ஜாக்கிரதை!! ஜாக்கிரதை!!!

வடஆற்காடு பார்ப்பனரல்லாதார் மகாநாடு.

பார்ப்பனரல்லாத கனவான்கள் ஷை மகாநாட்டிற்கு வாக்குச் சகாயமும், பொருள் சகாயமும் செய்து ஷை மகாநாட்டை சீரும் சிறப்புமுடையதாக நடத்திவைக்க வேணுமாக மிகவணக்கத்துடன் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

கோயம்புத்தூரில் நடக்கப் போகும் பார்ப்பனரல்லாதார் மகாநாடு நடந்தேறிய பின் வடஆற்காடு ஜில்லா பார்ப்பனரல்லாதார் மகா நாடு நடத்தப்படும் காலம் முதலியவை தெரியப்படுத்தப்படும்.

ஷை மகாநாட்டிர்க்கு நன்கொடை அளிப்பதாக வாக்களித்த கனவான்களின் பெயரும், தொகையும் கீழ்வருமாறு:—

உபர் நிருவாளர்கள்

டி. எஸ். முத்துகுமாரசாமி முதலியார் ரூ.	25
கே. பி. சிதம்பர முதலியார் வேலூர்	25
வி எஸ். பத்மநாப முதலியார் ,,	25
டி. பத்மநாபநாயுடுகாரு ,,	25
கே. சி. கந்தசாமி முதலியார் வாணியம் பாடி	25
வி. ஷண்முக முதலியார் ,,	25
டி. கரியகோவிந்தன் ,,	25
எஸ். வரதசெட்டியார் திருப்பத்தூர்	25
ஏ. ராமச்சந்திர ரெட்டியார் தி. மலை	25
எம். பி. ரங்கசாமிசெட்டியார் தி. மலை	25
D. V. R. சிவலிங்கய்யா ஆம்பூர்	25
ஜனாப் கான்சாஹிப் பாங்கி அப்துர்ரஜாக் சாஹிப்பஹதூர் ஆம்பூர்	25
கே பி. மாரியுடையாரவர்கள் குப்பம்;	25
ரங்கசாமி முதலியார் சந்தவாசல்	25
கிருஷ்ணார்பணம்	25

அடுத்த வாரம்

காட்டடிபாளையம் புதூரில் நடைபெற்ற பிரபல, தேசிய மணத்தை பற்றியும், திரு. வி. கலியானசுந்திர முலிதயார், மா. ரா. குமாரசாமிபிள்ளை ஈ. வெ. இராமசாமி நாயக்கர் இவர்கள் அன்று நடைபெற்ற "குமான் வாசகசாலை" ஆண்டு நிறைவுவிழாவில் நிகழ்த்திய சொற் பொழிவும், 9 தேதி ஈரோட்டில் தேசபக்தர் தங்கபெருமாள் பிள்ளையின் திருஉருவப் படத்தை திரு. வி. கலியாணசுந்திர முதலியார் அவர்களால் திறந்து வைக்கப்பட்டவைபவம் ஆகியவைகள் இவ்வாரம் இடம் இல்லாததினால் அடுத்தவாரம்வெளியிடப்படும்.



குடி அரசு.

ஈரோடு, பிரபவ-ஞூ வைகாசி 30உ

"வரதராஜு அறிக்கை" ராமசாமியின் சமாதானம்

II

மேல்கண்ட தலையங்கமிட்டு சென்ற வாரம் நான் எழுதிய விஷயங்களுக்கு மறுபடியும் 6-6-27-தேதி "தமிழ்" நாடு பத்திரிகையில் பதில் எழுது முகத்தான் சில விஷயங்கள் எழுதப்பட்டிருக்கின்றன.

அப்பதிலின் தன்மையைப்பற்றி விவரிக்கு முன்பாக அப்பத்திரிகை ஏதாவது ஒரு சமாதானம் எழுத முன்வந்ததற்காக அதைப்பாராட்டுவதுடன் மிகுதியும் மகிழ்ச்சியடைகிறேன். ஏனெனில் இதுவரை ஒரு பத்திரிகையாவது காங்கிரசைப்பற்றி இவ்வளவு நாளாக நான் எழுதிக்கொண்டு வந்த விஷயங்களுக்கு பதில் என்பதாக ஒரு வரிகூட எழுத முன்வராமல் வழக்கம் போல் தங்கள் தங்கள் "தேசாபிமானப் பிரசாரத்தை" நடத்திக்கொண்டும் பார்ப்பனரல்லாதார் இயக்கத்தை வைது கொண்டுமே வந்திருக்கின்றன. ஆனால் காரைக்குடி "ஊழியன்" பத்திரிகைகூட ஒரு சமயத்தில் நம்மைப்பற்றி "சுயமரியாதைப் பிரசாரம் செய்வது தேசத்திற்கு ஆபத்து" என்றுமாத்திரம் எழுகிற்றே அல்லமால் காங்கிரசைப்பற்றி நாம்எழுதியதற்கு பதில் ஒன்றும் எழுதவில்லை. "தமிழ் நாடு" துணிந்து எழுத முன்வந்து விட்டதால் இனி ஒரு சமயம் எல்லாப் பத்திரிகைகளும் எழுத முன் வந்தாலும் வரலாம். ஆனாலும் இம்மாதிரி யாராவது சமாதானம் சொல்ல வருவதின் மூலமாகத்தான் அவ்விஷயங்களை இன்னமும் பாமர மக்கள் நன்றாய் அறியும்படி செய்ய சவுகரியங்கள் ஏற்படும். இல்லாவிட்டால் ஒரு தலைபக்ஷமாக நான் எழுதுவதாய் பிறர் நினைக்க எது உண்டாகலாம். அதனால் தான் மகிழ்ச்சி அடைவதாக குறிப்பிட்டேன்.

பதில்எழுதமுன் வந்த "தமிழ் நாடு" பத்திரிகையானது நான் எழுதிய சமாதானங்களை தனது பத்திரிகையில் எடுத்துப் போட்டுமுறையேநான்எழுதிவருவது போல்எழுதியிருந்தால் அது இன்னமும் கொஞ்சம் பாராட்டத்தக்கதாக இருந்திருக்கும்என்பதுடன்எனது சமாதானததிற்கும நியாயம் செய்ததாகும் அப்படிக்கில்லாமல்,

"குடி அரசு" சமாதானத்தைப் பார்த்து எந்த தேசியவாதியும் வருந்தாமலிருக்க முடியாது" என்றும் "இம்மாதிரி ஒரு தேசத்திற்குறிய பெரிய தேசிய ஸ்தாபனத்தை முறைதவறிப் பழித்து விட விரும்பினால் இதை யார்தான் சகித்துக் கொண்டிருக்க முடியும்" என்றும் வீரகர்ஜனை செய்து எழுதியிருக்கிறது. சாப்பாட்டுக்கு பந்தியிலே உட்காரக் கூடாது என்று தடைபடுத்தப்பட்ட ஒருவன் இலை ஒட்டையாயிருக்கிறது என்று சொல்லுவதில் என்ன பிரயோஜனம். அதுபோலவே "தேசியம்" என்பதும் "தேசிய ஸ்தாபனம்,, என்பதும் அஸ்திவாரத்திலிருந்தே புரட்டு என்றும் சிலர் வயிற்றுப் பிழைப்புக்கும் உத்தியோகத்திற்கு மென்றே ஏற்பட்டதென்றும் நமது நாட்டு பெரும்பான்மை மக்களான அதாவது 100-க்கு 90 பேர்களுக்கு மேற்பட்ட ஜன சமூகத்திற்கு கொஞ்சமும் நன்மை தரத்தக்கதல்லாததோடு பெருங்கெடுதி தரத்தக்கதென்றும்நான்கணக்குப் புள்ளிகளுடன்விளக்கிஎழுதிவரும்போது அவைகளுக்கு முதலில் கொஞ்சமாவது விபரமாகச் சமாதானம் சொல்லாமல், எவ்விதம் பார்ப்பனர்கள் அவர்களின் புரட்டுகளை எடுத்துச் சொன்னால் "மதம் போச்சுது" "மதஸ்தாபனம்போச்சுது" "நாஸ்திகத்தனம் ஆச்சுது" என்றுசொல்லுகிறார்களோ அதுபோல்படித்த கூட்டத்தார்,பணக்காரக்கூட்டத்தார் ஆகியவர்களின்புரட்டுகளைஎடுத்துச் சொன்னால் "தேசம் போச்சுது" "தேசிய ஸ்தாபனம் போச்சுது" "தேசத்துரோகம் ஆச்சுது" என்றுசொல்வதால் அதற்குப்பயந்து கொண்டு உண்மையை வெளிப்படுத்தாமல் இருக்க முடியுமா என்பதை யோசிக்க வேண்டுகிறேன்.

"சமூக சமத்துவத்தையும், சுயமரியாதையும் சுதந்திரத்தையும் காங்கிரசின் மூலம் அடையாதபடி தென்னாட்டுப் பார்ப்பனர் செய்கிற கொடுமையை சகிக்கமுடியாமல் நாயக்கர் இம்மாதிரி எழுதுகிறாரே அன்றி தாமே முன்னின்று பிரசாரம் செய்து சிறை சென்று கவுரவப்படுத்திய காங்கிரஸ் மகாசபையை வேண்டுமென்று தூஷிப்பதாக நாம் நினைக்கவில்லை" என்று "தமிழ் நாடு" பத்திரிகை எழுதி இருக்கிறது.

இந்த இடத்தில் தான்பொதுஜனங்கள் கொஞ்சம்நன்றாய்கவனம்செலுத்திப்பார்க்க வேண்டும்.என்னவென்றால்நான் இப்போது காங்கிரசைக் கைப்பற்றி இருக்கும் தென்னாட்டுப் பார்ப்பனர்கள் செய்கையை மாத்திரம் கண்டிக்கவில்லை. மற்றும் காங்கிரசின் நடை முறைகளை மாத்திரம் நான் கண்டிக்கவில்லை. நான் கண்டிப்பது காங்கிரசின் அஸ்திவாரத்தையே—அதன் அடிப்படை தத்துவத்தையே கண்டிக்கிறேன். காங்கிரசை உண்டாக்கினவர்களே அவர்கள் யாராயிருந்தாலும் வெள்ளைக்காரர்கள் உள்பட உத்தியோகமும் அதிகாரமும் சம்பாதனையும் பெறவேண்டிய கூட்டத்தார்கள் என்றும் பெரிதும் அதே நோக்கத்தோடு ஏற்படுத்தி அது ஏற்பட்ட நாள் தொட்டு நாளதுவரையும் அவர்கள் அதே காரியத்தில் வெற்றி பெற்றும் வந்திருக்கிறார்களே ஒழிய தென்னாட்டுப் பார்ப்பனர்கள் மாத்திரம் இந்தக்காரியத்திற்கு முழுப் பொறுப்பாளிகள் அல்ல என்பதையும் யாவரும் உணர வேண்டுமாய்க்கேட்டுக்கொள்ளுகிறேன். இந்த 40 வருஷங்களாக காங்கிரஸ் பிரதிநிதிகள் யார் என்பதை கணக்குப்போட்டு பாருங்கள். அதன் தலைவர்கள் யார் என்பதை குறிப்பிட்டுப் பாருங்கள். அதன் நிர்வாகி யாராயிருந்து வந்திருக்கிறார்கள் என்பதை ஞாபகப்படுத்திப் பாருங்கள். இவர்களில் யாராவது இந்தியநாட்டின் 100-க்கு 95 வீதம் உள்ளமக்கள் கூட்டத்திற்கு சம்பந்தப்பட்டவர்களா? என்று யோசித்துப் பாருங்கள். இதுமாத்திரமல்ல இதுவரை காங்கிரசில் செய்து வந்த தீர்மானங்களையும் அத்திர்மானங்களின் பலனாய் ஏற்பட்ட சீர்திருத்தங்களையும் அதன் அனுபவங்களையும் ஒவ்வொன்றாய் உங்கள் சொந்த பகுத்தறிவைக் கொண்டு யோசித்துப்பாருங்கள். தேசத்தைக்காட்டிக் கொடுத்து வாழவேண்டியதான ஆங்கிலக் கல்வி கற்றவர்களும், தேசத்தைப்பாழாக்கி வாழவேண்டியவர்களான வக்கீல்களும் கூலிக்காரர்களையும் தொழிலாளிகளையும் குடியானவர்களையும் விவசாயிகளையும் வதைத்து வாழவேண்டியவர்களான முதலாளிகளும் நிலச்சுவான்தாரர்களுமே பிரதிநிதிகளாயுள்ள ஒரு கூட்டம் அல்லது அவர்களால் ஏற்படுத்தப்பட்ட ஸ்தாபனம் 100–க்கு 90 பேர்களாயுள்ள அவர்களல்லாத மேல்கண்ட மக்களுக்கு எவ்விதத்தில் பிரதிநிதி சபையாகும்? பிரதிநிதி ஸ்தாபனமாகும்? என்று கேழ்க்கிறேன். இப்போது "இந்துக்கள்" எல்லோருக்கும் பொதுவானது என்று சொல்லப்படும் வர்ணாஸ்ரம தர்மபரிபாலன சபை எனக்கும் ஸ்ரீ வரதராஜுலுவுக்கும் ஸ்ரீ கல்யாணசுந்திர முதலியாருக்கும் பிரதிநிதி சபையாகுமா? அதைக்கூட்டி நடத்தும் ஒரு சிலர்கள் அந்த ஸ்தாபனத்தை இந்தியாவில் உள்ள 24 கோடி "இந்துக்களுக்கு" பிரதிநிதி என்று சொல்லிக் கொண்டும் இந்து வேதம், சாஸ்திரம், புராணம் என்பதுகளை ஆதாரமாய் வைத்துக் கொண்டும் நடத்துவதாகவே தான் சொல்லிக் கொள்ளுகிறார்கள். வழக்கமும் சட்டமும் கூட அதை ஒப்புக்கொள்ளுகிறது. ஸ்ரீமான்கள் ஜயவேலு, மூத்துரங்க முதலியார், ஆதிநாராயண செட்டியார், ஒ. கந்தசாமி செட்டியார் போன்ற சில கனவான்கள் அதை இந்துக்களின் பிரதி நிதிசபை என்றும் ஒப்புக்கொள்ளுகிறார்கள் என்றே வைத்துக்கொள்வோம். அதனாலேயே ஸ்ரீமான்கள் வரதராஜுலு, வீரய்யன் எம். சி. ராஜா நான் முதலியவர்கள் ஒப்புக்கொள்ளவேண்டியது தானா? ஒரு சபையின் பெயர் பிரதானமா? அல்லது கொள்கையும் நடவடிக்கையும் நடத்தும் ஆசாமிகளும் பிரதானமா? என்பதை நன்றாய் யோசித்துப்பார்க்க வேண்டும். நமது மாகாணத்தில் காங்கிரஸ் தலைவர்கள் எனக்குத் தெரிந்தவரையில் 4 கனவான்கள் பெயர் ஞாபகத்திற்கு வருகிறது. ஸ்ரீமான்கள் சங்கர் நாயர், மணி அய்யர், விஜயராகவாச்சாரியார், சீனிவாச ஐயங்கார் இவர்களின் யோக்கியதை என்ன நான்கு பேர்களும் எந்த விதத்தில் தேச மக்களுக்கு பிரதிநிதியானவர்கள் இவர்களின் தொழில் என்ன? இவர்களின் காலக்ஷேபம் என்ன? ஏழை மக்களை வஞ்சித்து பாமர மக்களை ஏமாற்றி தாங்கள் மாதம்

1000, 5000, 10000, 20000 என்பதாகக் கொள்ளையடித்து எந்த சர்க்காரைக்கண்டிப்பதுபோலும், வைவதுபோலும், ஒழிப்பதுபோலும், வேஷம் போட்டுநம்மை ஏமாற்றுகிறார்களோ அந்த சர்க்காருக்கு அபிமான புத்திரர்களாக இருந்து நம்மைக் காட்டிக் கொடுத்து வாழ்ந்தவர்கள்—வாழ்பவர்கள் தானே அல்லாமல் வேறுண்டா? இவர்கள் பிள்ளை குட்டி மறுமக்கள் அண்ணன் தம்பி மாமன்மைத்துனன்முதலியவர்களையும் சர்க்கார்தெய்வத்திற்குஒப்படைத்து அவர்களைக் கொண்டு நம்மைக்காட்டிக்கொடுத்து அச்சர்க்காரை வாழவைக்கும் முறையில் வயிர்வளர்க்கச்செய்திருக்கிறார்களே தவிரவேறு ஏதாவது நன்மை உண்டா? ஸ்ரீமான்கள் மணி அய்யர் தலைவரானார் அய்யர் பார்ப்பனர்களுக்கு உத்தியோகம் வாங்கிக்கொடுத்தார். சங்கரநாயர் தலைவரானார் மலையாளிகளுக்கு உத்தியோகம் வாங்கிக் கொடுத்தார். விஜயராகவாச்சாரியார்சீனிவாசய்யங்கார் தலைவர்களானார்கள் அனேக அய்யங்கார் பார்ப்பனர்களுக்கு உத்தியோகம்வாங்கி கொடுத்தார்கள். சர்.சி. பி. ராமசாமி அய்யர் காங்கிரஸ் காரியதரிசி ஆனார், இன்று அவரும் 5500 ரூ. சம்பளம் வாங்கிக்கொண்டு சமயல்காரப் பார்ப்பனர் மக்கள் பஞ்சாங்கப்பார்ப்பான் மக்கள் தூதுவப்பார்ப்பனர் மக்கள் வரையில் ஐகோர்ட் ஜட்ஜி, ஜில்லா ஜட்ஜி, சப் ஜட்ஜி, சூப்பிரென்டெண்ட் முதலிய பணம்கொளிக்கும் உத்யோகங்கள் கொடுத்தார். ஸ்ரீ ரங்கசாமி அய்யங்கார் காங்கிரஸ் காரியதரிசி ஆனார் அவர் தம்பி மீ 2000 ரூபாய் வாங்குகிறார். அவர் சுற்றத்தார்கள் அது போலவே வாழ்கிறார்கள். ஸ்ரீமான் ராஜகோபாலாச்சாரியார் காரியதரிசியானார் இப்போது அவர் பேரால் அவர் சிபார்சால் எந்தெந்த உருப்படிகளோ அரசாங்கத்தில் உத்தியோகம் பெறுவதும் கதர் இலாக்காவில் வயிர் வளர்ப்பதுவுமாய் நடைபெற்று வருகிறது. இனியும் ஸ்ரீ நாயுடுவும் ஸ்ரீகல்யாணசுந்திர முதலியாரும் பார்ப்பனரல்லாதாரை காங்கிரசில் சேர்த்து காங்கிரஸ் தலைமைப்பதவி பெற்று காங்கிரசை நடத்தினால் இதைவிடவேறு என்னசெய்துவிட முடியும்? எல்லாவற்றையும்விட ஒன்று கேழ்க்கிறேன். மகாத்மா காந்தி காங்கிரசில் சேர்ந்து நானும் என்னைப்போன்ற ஆயிரக்கணக்கானபைத்தியக்காரர்களும் அவருக்கு சிஷ்யர்களாக இருந்தும் கோடிக்கணக்கான ரூபாய் செலவு செய்தும் சிறை சென்றும் அதற்குத்தகுந்த என்ன காரியத்தைச் சாதிக்கமுடிந்தது? இதற்கு பதில்யாராவது சொல்லட்டும். பலகெடுதிகள் ஏற்பட்டது என்று சொல்லக்கூடியவர்களை தடுக்கக்கூட நமக்கு யோக்கியதை இல்லை. மேலும் அப்பத்திரிகை "நாயக்கரே காங்கிரசில் சேர்ந்து உழைத்து பிரசாரம்செய்து ஜெயிலுக்கும் போய் வந்துவிட்டு அதே காங்கிரசை தூஷிக்கிறார்" என்று எழுதுகிறது இதுவாஸ்தவம் காங்கிரசைப்பற்றிய எனது பரீக்ஷை முடிந்துவிட்டது. மக்கள் தனது நாட்டிற்கு ஆக என்ன என்ன செய்ய வேண்டுமென்று மகாத்மா சொன்னாரோ அவற்றை என்னால் கூடியவரை செய்துகாட்டினேன். மகாத்மாவும் செய்துபார்த்து விட்டார். எங்களது கொள்கைக்கு காங்கிரசை உபயோகப்படுத்திப் பார்த்தோம். கண்ணியமாகவும் அதை நடத்தினோம். அதைக்கொண்டு நம்நாட்டை விடுதலை செய்விக்க முடியாது அது விடுதலைக்கான ஸ்தாபனமல்ல அடிமைத்தன்மைக்கு ஆன ஸ்தாபனம்தான் என்பதாக நிர்மாணித்து ஆய்விட்டது, ஆதலால் அதை ஒழிக்க வேண்டியது நாட்டின் விடுதலையை எதிர்பார்ப்பவன் கடமை என்கிற முடிவுக்கு வந்து விட்டேன். காங்கிரஸ் ஒழிந்த மறுதினமே மகாத்மாவை சத்தியாக்கிரக உலகத்தில்காணலாம். தியாக உலகத்தில்காணலாம். விடுதலை உலகத்தில் காணலாம். இது உறுதி என்று சொல்லுவேன். மகாத்மா காங்கிரசை விட்டு விலகும் போது என்ன சொன்னார்? என்பதை கவனியுங்கள். எனது நாட்டின் விடுதலைக்கு ஏற்ற கொள்கைகளை படித்த வகுப்பாரைஒப்புக்கொள்ளும் படி செய்வதற்கு ஏற்ற ஆற்றலை கடவுள் எனக்குக் கொடுக்க வில்லை. ஆதலால் எனது கொள்கைகளை காங்கிரஸ் ஸ்தாபனத்திலிருந்து விலக்கிக்கொள்ளுகிறேன். என்னாலானதை நான் வெளியில்செய்து பார்க்கிறேன் என்று சொன்னதை ஸ்ரீமான்கள் நாயுடுவும் முதலியாரும் ஒப்புக்கொள்ளுகிறார்களா ? ஆக்ஷேபிக்கிறார்களா? என்று கேழ்க்கிறேன்.

மகாத்மாவினால் திருப்தி செய்விக்கமுடியா படித்தவர்களது ஸ்தாபனமான பணம் சமபாதிக்கும் காங்கிரசை ஸ்ரீமான்கள் நாயுடுகாரும் முதலியாரும் கைப்பற்றி மகாத்மா கொள்கைகளை அப்படி படித்தவர்களுக்குள் புகுத்தி காங்கிரசின் மூலம் விடுதலை சம்பாதித்து கொடுக்கப்போகிறார்களா? என்று கேழ்க்கிறேன்ஒருக்கால் ஸ்ரீமான் நாயுடுவும் முதலியாரும் ஒப்புக்கொள்வதனாலும் வாசகர்களே நீங்கள் முடியும் என்று நம்புகிறீர்களா? என்று கேழ்க்கிறேன். தவிரவும் அப்பத்திரிகை எழுதுவதாவது சரித்திர ஆராய்ச்சியும் பிரதேச சுதந்தரக் கிளர்ச்சியின் அனுபோகமும் எனக்கு இல்லாததால் நான் இப்படி சொல்லுவதாய் மிகவும் தாக்ஷண்ணியமான பாஷையில் எழுதி இருக்கிறது. பாஷையில் தாக்ஷண்ணியம் காட்டியதைப் பொருத்தவரை நான் நன்றியறிதலுள்ளவனாக இருக்கிறேன்.

கருத்தைப் பொருத்தவரையிலும் மாறுபடுவதற்கு மன்னிக்க வேண்டுகிறேன்.

இதற்கு ஆக ஒரு சிறு கதை சொல்லுகிறேன். ஒரு ஊரில் ஒருவன் வீட்டில் அவனது தாயார் இறந்து விட்டாள் அதற்கு துக்கம் விசாரிக்கப் போனவர்கள் அச்சிறுவனைப்பார்த்து "உன் தாயார் இறந்து போனதைப் பற்றி எங்களுக்கு மிகவும் துக்கமாக இருக்கிறது. அந்தம்மாள் உனக்கு மாத்திரம் தாயாரல்ல எனக்கும் தயாராயிருந்தாள், இந்த வீதிக்கே மற்றும் இந்த ஊருக்கே தாயாராயிருந்தாள். அப்பேற்பட்ட புண்ணியவதிபோய்விட்டாளே என்று மிகவும் வருத்தப்படுகிறோம்" என்று ஆறுதல் சொன்னார்கள். அடுத்த வாரத்தில் பக்கத்து. வீட்டிலுள்ள ஒருவரின் மனைவி இறந்து விட்டாள். இந்த வாலிபன் அந்நண்பர் வீட்டிற்கு துக்கத்தை விசாரிப்பதற்குச் சென்றவன் துக்கம் விசாரிக்கும் முறை இப்படித்தானுக்கும் என்று நினைத்துக்கொண்டு வீட்டுக்காரரைப்பார்த்து "ஐயோ உன் மனைவிஇறந்துவிட்டதைப்பற்றிநான்மிகவும் துக்கப்படுகிறேன் அப்புண்ணியவதிஉனக்கு மாத்திரமா மனைவி என்று இருக்கிறாயா? எனக்கும் மனைவியாய் இருந்தாள், இந்த வீதியிலுள்ள எல்லாருக்கும் மனைவியாயிருந்தாள், இந்த ஊராரிலும் யாருக்குவேண்டுமானாலும மனைவியாயிருந்தாள், அப்பேற்பட்ட தர்மவதி இறந்து போனதற்கு நான் மாத்திரமல்ல இந்த ஊரார் எல்லோரும் துக்கப்படுகிறார்கள்" என்று சொன்னாலும் அது போல இருக்கிறது. உலகத்தில் உள்ள மற்ற தேசக்கிளர்ச்சியை நமது இந்திய நாட்டுக்கு ஒப்பிட்டு அச்சரித்திரங்களின் படிப்பும், கிளர்ச்சிகளின் படிப்பும் இந்நாட்டில் நடத்த எத்தனிப்பது. உலகத்திலுள்ள மற்ற தேசம் எல்லாம் வேறு. இந்தியா வேறு. அதனாலே தான் "தமிழ் நாடு" பத்திரிகை சொல்வதுபோன்ற அயல் நாட்டுச் சரித்திரங்களையும் கிளர்ச்சியையும் மற்றவர்கள் யாருக்கும் பின்வாங்காத அளவுக்கு படித்தரிந்த மகாத்மா காந்தி இந்நாட்டு விடுதலைக்கு அவைகள் எதையும் உபயோகித்துக் கொள்ளாமல் தன் சொந்த முறையில் ஒரு தத்துவத்தைப் புகுத்தினார்கள் என்பதை தெரிவித்துக்கொள்ளுவதுடன் அயல் நாட்டு விடுதலை சரித்திரமும்கிளர்ச்சி மாதிரியம் நமது நாட்டுக்கு உதவாது என்பதையும் அறிவித்துக்கொள்ளுகிறேன்.

மேலும் அப்பத்திரிகை எழுதி இருப்பதாவது "நாயக்கர், வரி உயர்ந்ததும் பார்ப்பனரல்லாதார் நன்மை கெட்டு பார்ப்பனர் ஆதிக்கம் வலுத்ததும் தொழிலாளர் நிலைமை கேவலப்பட்டதும், இன்னும் பல குறைகளுக்கும் காங்கிரசே காரணமென்று சொல்லுகிறார். இது சரியல்ல மற்ற தேசங்கள் காங்கிரஸ் என்கிற ஸ்தாபனத்தின் மூலம் தான் வெற்றி பெற்று இருக்கிறது. காலத்திற்கு ஏற்றபடியும் தேவைக்குத் தக்கபடியும் எல்லாதேசத்திலும் தான் உயர்ந்திருக்கிறது. ஆதலால் இவற்றிற்கு காங்கிரஸ் காரணமல்ல" என்று எழுதிஇருக்கிறது. இதற்கும் முன்சொன்னதுக்கம் விசாரிப்பு கதையையே சாமாதானமாக சொல்ல வேண்டி இருப்பதற்கு வருந்துவதுடன் மேலும் இரண்டொரு சமாதானம் சொல்லுகிறேன்

நமது அரசாங்கத்தார் உயர்த்தியிருக்கும் வரி கால தேச வர்த்தமான அதிகச்செலவை உத்தேசித்தா? அல்லது காங்கிரசுக்கு அழுக வேண்டிய சில உத்தியோகங்களை உத்தேசித்தா? என்பதையும் நமதுநாட்டு அரசாட்சிக்கு இவ்வளவு உத்தியோகம் வேண்டுமா? என்பதையும் மற்ற தேச உத்தியோகங்களுக்கு இவ்வளவு சம்பளமிருக்கிறதா? என்பதையும் யோசித்துபாருங்கள்.

ஒரு கவர்னரும் இரண்டு நிர்வாக சபைமெம்பர்களும் இரண்டு காரிய தரிசியும் அரசாட்சி புரிந்த சென்னை அரசாங்கத்திற்கு ஒரு கவர்னரும்7நிர்வாகஅங்கத்தினர்களும்7 காரியதரிசிகளும்எதற்காக? இது கால தேசவர்த்தமானத்தை உத்தேசித்தா காங்கிரசின் தேசத்துரோகத்தை உத்தேசித்தா? என்பதை கண்ணியமாய் சொல்லட்டும். 5 ஐகோர்ட்டு ஜட்ஜிகள் இருந்துநியாயம் விளங்கின சென்னை உயர்தர நீதிமன்றத்திற்கு 15 ஐகோர்ட் ஜட்ஜிகள் இருப்பது காலதேச வர்த்தமானத்தை உத்தேசித்தா? காங்கிரசின் தேசத்துரோகத்தை உத்தேசித்தா?

ஸ்ரீமான்கள் சர். சி. பி. ராமசாமிக்கும் சர் சிவஞானத்திற்கும் டாக்டர் சுப்பராயனுக்கும் மற்றும் இவர்கள் போன்ருருக்கும் மாதம் 5500 ரூ. கொடுப்பதும் காரியதரிசிகளுக்கும் ஜட்ஜுகளுக்கும் 2500. 3000 கொடுப்பதும் காலதேச

வர்த்தமானத்தை உத்தேசித்தா? காங்கிரசின் தேசத்துரோகத்தை உத்தேசித்தா? இதுபோன்ற ஆயிரக்கணக்கான உத்தியோகங்கள் அதிகமானதும் அதுகளுக்கு சம்பளங்கள் கொடுக்கவேண்டியதும் நாட்டின் உண்மையின் அவசியத்தை முன்னிட்டா? காங்கிரசின் தேசத் துரோகத்தை முன்னிட்டா? இவர்களுக்கு இவர்களைப்போலவே வெள்ளைக்காரரும் அதிகச்சம்பளம் கொடுக்கவேண்டியதற்காகவே 40 கோடி ரூ. வரிசெலுத்திவந்த நமது நாட்டு குடியானவர்கள் வியாபாரிகள் தொழிலாளிகள் கள்ளு சாராயம் குடிக்க வேண்டியவர்களை அதிகப்படுத்த அவசியங்கள் ஆகிய வரிகள் கார்ட், கவர், ரயில் சார்ஜ் உப்பு வரிவருமான வரி சாமான்கள் மீது வரிமுதலியதுகளை அதிகமாக்க ஏற்பட்டதா? அல்லது தேசத்தின் காலதேச வர்த்தமானத்தை உத்தேசித்து ஏற்பட்டதா? என்று கேழ்க்கின்றேன்.

தூங்குபவர்களை தட்டிஎழுப்பலாம் "தமிழ்நாடு" போன்று எல்லா விபரமும் தெரிந்த வேண்டுமென்றே கண்ணை கெட்டியாய் மூடிப்படுத்துக்கொண்டிருப்பவர்களை எப்படி எழுப்புவது?

மற்றும் அப்பத்திரிகை எழுதுவதாவது "காங்கிரஸ் தோன்றிய பிறகு தான் மக்களுக்கு தேசாபிமானம் இன்னது என்று தெரிந்தது. சீர்திருத்தங்களைப் படிப்படியாய் அடைய முடிந்தது அடைந்ததை ஆள முடிந்தது. தேச சமூக சமய வேத புராண புரோகித விடுதலைகளில் உணர்ச்சி ஏற்பட்டது" என்று எழுதுகிறது.

இதில் மருந்துக்குக்கூட உண்மை இல்லை காங்கிரஸ் ஏற்பட்ட பிறகு தான் மக்களுக்கு தேசத்துரோகம் செய்யும் ஆசை கற்பிக்கப்பட்டது தேசத்துரோகம் செய்து வாழ வேண்டிய அவசியமே மக்களுக்கு ஏற்பட்டது காங்கிரசுக்கு முன் உத்தியோகஸ்தர்கள் மாத்திரம் அதுவும் மிகுதியாக பார்ப்பன உத்தியோகஸ்தர் மாத்திரம் செய்ய முடிந்தது இப்போது மக்கள் ஒவ்வொருவரும் வாழவேண்டுமானாலும் சிறப்பாக அயோக்கியர்கள் வாழவேண்டுமானாலும் உத்தியோகங்களைவிட காங்கிரசு தான்தக்க இடமாக இருந்து வருகிறது. சமய சமூகவாரிகள் விடுதலைக்குநமது நாடு ஆயிரக்கணக்கான வருஷங்களாய் போராடுகிறது. அது வெற்றி பெறும் நாளையில் காங்கிரசின் பலனாய் பார்ப்பன ஆதிக்கம் வளர்ந்து அவ்விடுதலைகளுக்கு இடையூறாய் நிற்கிறது இன்றும் இவ்விடுதலைக்கு காங்கிரசின் போரல் உழைக்க இடமிருக்கிறதா? என்று கேழ்க்கிறேன். காங்கிரசால் வந்த சீர்திருத்தத்தைதானே நம்மநாட்டுக்கு ஆபத்து என்று சொல்லுகிறேன். அது வந்ததால் கெடுதிதானே ஆயிற்று. சீர்திருத்தத்தை நடத்திக்காட்ட முடிந்தது என்கிறது எதைநடத்திக்காட்டியதாக அப்பத்திரிகை சொல்லுகிறது என்பது நமக்கு விளங்கவில்லை மந்திரிபதவிகளில் டாக்டர் சுப்பராயன், பனகால் ராஜா, முதலியவர்கள் நடத்திகாட்டியதையா தேர்தல்களில் சீனிவாசய்யங்கார் நடத்திக் காட்டியதையா இந்தியருக்கு உயர் பதவி கொடுத்ததில் சர். சி. பி. நடத்திக்காட்டியதையா? ஸ்தலஸ்தாபனங்களில் ஸ்ரீமான் ஈரோடு டி. ஸ்ரீனிவாசமுதலியார் நடத்திக்காட்டியதா? கூட்டுத்தொகுதியில் இந்திய சட்ட சபைக்கு தென்னாட்டில் அய்யங்கார்களே போகமுடிந்ததையா? எதைச்சொல்லுகிறது? என்று கேட்கிறேன். இதுபோலவே அதன் மற்ற வரிகளும் இருக்கின்றன. மற்றவைகளுக்கும் பதில் விரும்பினால் வரிவரியாய்ப் பிரித்து எழுதத்தயாராயிருக்கிறேன்.

ஒற்றுமையை உத்தேசித்து கொள்கைகளை விட்டுக்கொடுத்த பலன் தான் மகாத்மா முக்காடிட்டு சங்கராசாரி போல் மூலையில் உட்காரநேர்ந்ததும் அவரது நடவடிக்கைகள் இப்போது ஒரு மடாதிபதிகள் சம்பரதாயம்போல் ஆனதும் மடங்களில் பலர் ஆஷாடபூதித்தனம் செய்து பெருமை அடைவது போல் காந்தி மடத்திலும் பல "சாஸ்திரிகள்" போய்அமர்ந்து முகஸ்துதி செய்து பெருமை பெற்று வாழ்வதுமான காரியங்கள் நடந்தது. காந்திகொள்கைக்கு இருந்த மதிப்புகள் அடியோடு போய் காந்தி மடமேற்பட்டு விட்டதற்கு காரணமே கொள்கையை விட்டுக்கொடுத்து ஒற்றுமையை நாடின பயித்தியக்காரத்தனம் தான். மகான்கள் செயலில் பயித்தியக்காரத்தனமும் ஒன்றுதலால் மகாத்மா காந்திக்குஅதுதகும். ஒருசமயம் அதை மாற்றிக்கொள்ள அவருக்குநம்பிக்கைபிறந்தாலும்பிறக்கும். நமக்கு அது தகாது நமக்கு அந்நம்பிக்கை இல்லை. கொள்கை விட்டு ராஜியான ஒரு ஸ்தாபனமும், ஒரு மனிதனும் ஒரு நாடும் உருப்படியாகாது என்பது எனதுபுத்திக்கு எட்டிய உறுதியான முடிவு.

ஸ்ரீமான் கல்யாணசுந்திரமுதலியார் அவர்களுக்கும், "காங்கிரஸ்" பைத்தியம் இருப்பது நமக்கு ஆச்சரியமாக இருக்கிறது. ஸ்ரீ முதலியாருக்கு அரசியல் விளம்பரம் தேவையில்லை. ஆங்கிலம் படித்த பயனாக தேசத்துரோகத்தன்மை தோன்றவும் இடமில்லை. வேறு விதத்தில் அவர் ஒரு பெரிய ராஜ தந்திரியாகவேண்டியதவசியமும் இல்லை. ஆதலால் அவருக்கு "காங்கிரஸ்" பைத்தியம் ஏனோ தெரியவில்லை. எப்படியானாலும் 'காங்கிரஸ்' தேசத்துரோக ஸ்தாபனமென்பதையும், ஏழைகளை வதைக்கும் ஸ்தாபனம் என்பதையும் நாம் கோபுரத்தின் மேலிருந்து கூவுவோம். ஆனால் கடைசியாக ஒருவார்த்தை அதாவது யாவரொருவர் 'காங்கிர'சைப் பற்றி என்னைப்போல் நினைக்கிறார்களோ, என்னைப் போன்ற முடிவை உறுதியாகக்கொண்டு இருக்கிறார்களோ அவர்கள் மாத்திரம் 'காங்கிரசில்' சேரவேண்டியதில்லை' ஸ்ரீமான் நாயுடுவைப் போலவும் முதலியாரைப்போலவும், மற்றும் 'ஜஸ்டிஸ்' கட்சியில் உள்ள சிலர்கள்போலவும் 'காங்கிரஸ்'ஒரு தேசீய சபை அதனால் தேசத்திற்கு நன்மைசெய்யலாம் என்று யாராவது நினைப்பார்களே ஆனால், அவர்கள் அவசியம் தங்கள்மனசாட்சிப்படியே நடக்க வேண்டுமென்றுகேட்டுகொள்ளுகிறேன் ஆனால் மனதில் உண்மை தெரிந்து சுயநலத்திற்காகவோ, வாழ்வுக்காகவோ போய் சேர்ந்து தேசத்தையும் ஏழைமக்களையுத் கொடுக்காதீர்கள் என்று பிரார்த்திக்கிறேன்.

ஸ்ரீனிவாசய்யங்கார் பணத்தின் மகிமை,

சென்ற வாரம் தூத்துக்குடியில் ஸ்ரீமான் ஸ்ரீனிவாசய்யங்கார் சிஷ்யர்களில்ஒருவரான ஒரு குப்புசாமி முதலியார் அவர்கள் தூத்துக்குடியில் "காங்கிரஸ்" (பார்ப்பன) பிரசாரம் செய்யும் போது ஒரு கூட்டத்தில் ஸ்ரீமான் ஈ வெ ராமசாமி நாயக்கரும் தானும்!ஒரே கள்ளுக்கடையில் கள்ளுகுடித்தோம் என்றும் தனக்கு சீனிவாசய்யங்கார் சிலவுக்குக் கொடுக்கிறார் என்றும மற்றும் பலவிதமாய் பெண்டு பிள்ளைகளைக்குறித்தும வேடிக்கையாகப் பிரசங்கம் செய்தார் என்றும் அக்கூட்டத்தில் உள்ள பார்ப்பனர்கள் குலுங்கி குலுங்கி நகைத்தார்கள் என்றும்ஸ்ரீனிவாசய்யங்கார்கக்ஷியாரை ஆதரிப்பதாக சொல்லிக்கொள்ளும் சிலபார்ப்பனரல்லாதார்கள் கூட இதைப்பற்றி வருதப்பட்டார்கள் என்றும் ஸ்ரீமான் வெ. நாராயணன் எனபவர் தூத்துக்குடியில் சில கனவான்கள்முன்னணியில் நமக்குச் சொன்னார் இது உண்மையானால் ஸ்ரீ. ஸ்ரீனிவாசய்யங்கார் பணத்தின் மகிமையே மகிமை.

நாகையில்

வெறுக்கத்தக்க சேதி.

நாகையில் நமது சகோதரர்களில் சிலர் அதாவது ஜனாப் அப்துல் அமீத்கான், ஜனாப் தங்கமீரான் சாயபு, ஸ்ரீமான் கிருபாநிதி முதலியவர்கள் பிரசாரம் செய்ய வந்த காலையில் கூட்டத்தில் சிலர் மிக இழிதன்மையாய் நடந்துகொண்டதாக பத்திரிகையில் காணப்படுகிறது. (அதாவது கூட்டத்தில் பாதரக்ஷை எறியப்பட்டதாம்) அது வாஸ்தவமானால், நாகையில் உள்ள எனதன்பான தொழிலாளர் சகோதரர்களும், நாகையில் உள்ள பார்ப்பனரல்லாத பிரமுகர்களுக்கும் கூட அவமானகரமான காரியமென்றே சொல்லுவோம. இவ்விழிதகைமை ஆனகாரியத்தினால் பார்ப்பனரல்லாத சமூகத்திற்கு வந்த நன்மை என்ன? பொதுவாழ்வில் யாவருடைய குற்றத்தையும் ஆண்மையுடன் கண்டிக்க யாவருக்கும் உரிமைஉண்டு. இம்மாதிரியானகாரியங்களினால் மிகவும் சமூகத்திற்கே அவமானத்தை விளைவிக்கத் தக்கதாகவும் நடந்து கொண்டதற்கும் அக்கூட்டத்தில் நமது பெயரும், நமது பத்திரிகையின் பெயரும் அடிபட்டுக்கொண்டு இம்மாதிரி நடந்ததற்கும் நாம்மிகுதியும் வெட்கமடைகிறோம். பார்ப்பன சூழ்ச்சியின் பயன் என்னவாய் முடிகிறது பார்ப்பன வஞ்சக புரோகிஜர் கோட் ஆகிய ராமாயணம் என்னும் புத்தகத்தில் என்ன சொல்லியிருக்கிறது? எதிரியைஜெயிக்க முடியாவிட்டால், எதிரியின் கூட்டத்தில் உள்ள ஒரு ஆசாமிக்கு ஆசைவார்த்தை சொல்லி லஞ்சம் கொடுதது நமது சுவாதீனப்படுத்திக்கொள்ளவேணடும், அவர்களுக்குள்ளாக விவகாரம் இருந்தால் ஒரு கக்ஷியில் (பீசில்லாமல்) சேர்ந்துகொண்டு ஒருவனுக்கு கெடுதி செய்யவேண்டும், அதாவது விபூஷணருக்குப பட்டம் கட்டுவதாகச்சொல்லி அவன் தமயனுக்குவிரோதமாய் தன் கட்சியில் சேர்த்துக்கொண்டதும், வாலி சுக்ரீவன் சண்டையில் சுக்கிரீவனுடன் சேர்ந்துகொண்டு வாலிமேல் சுக்ரீவனைத் தூண்டிவிட்டு தான் உள்ளுக்குள் இருந்துகொண்டு திருட்டுத்தனமாய் வாலியை கெடுத்ததும் போலவும். கூட்டம் அதிகமாய் ஏற்பட்டு தங்களால் சமாளிக்க முடியாத காலத்தில் மூல பல சைன்னியங்களுக் குள்ளாகவே ஒருவரை ஒருவர் அடித்துக்கொன்றுகொள்ளுமபடியாக செய்வித்தது போலவுமாய்இப்போது பார்ப்பனர் செய்யும் சூழ்ச்சியை அறியாமல் நாம் நம்மவர்களை இம்மாதிரி நடத்துவது அறியாமையே ஆகும். எந்தக் கூட்டதிலாவது எந்தப் பார்ப்பனராவது இம்மாதிரிசபையில் மாட்டிக்கொள்ளுகிறாரா என்பதை நன்றாய்யோசித்துப் பார்க்குமபடி வேண்டுகிறோம். பார்ப்பனரல்லாதார் மீது பழி சொல்ல ஒரு சமயம் இக்காரியம் ஒரு பார்ப்பனராலேயே ஏற்பட்டு இருந்தாலும் இருக்கலாம். ஆனாலும் அதற்கும் இடம் கொடுக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டியது பார்ப்பனரல்லாதார் கடமை என்று சொல்லுகிறோம்.

ஜாதி தெய்வ கற்பிதமா?

ஒரு சம்பாஷணை

சுப்பு:—அண்ணு, வந்தனம், எங்கே தங்களைப் பார்ப்பதே அரிதாயிருக்கின்றதே.

குப்பு:—எது ஆரம்பத்திலேயே அண்ணு பட்டம் தருகிறீர்கள், தாங்கள் எனக்கு மூத்தவராயிருந்தும், தங்கள் பட்டத்தை கவனித்தால், வேற்றுமை விளையும்போலிருக்கிறது, அண்ணு, என்று சொல்வது கூட்டி வைக்கவில்லை, தம்பி யென்று சொல்லிப்பார்த்தால், கூட்டிவைப்பதை உங்கள் உதட்டில் பார்க்கலாம்.

சுப்பு:—அதென்ன? எனக்கு ஒன்றும் விளங்கவில்லை, எல்லாம் கலிகாலக் கொடுமை.

குப்பு:—என்ன கலிகாலமென்று சொல்கிறீர்கள்; கலிகாலமென்ளெரு காலமுண்டா? கலிகால மென்ருல் அது கருப்பா? சிகப்பா? முன்காலத்தில், உடன் கட்டை யேறுதல், நரபலி கொடுத்தல், மனிதர்களை, மனிதர்கள் புசித்தல் சூத்திரன் தபம் செய்தால், பார்ப்பனர்களின் குழந்தைகள் சாதல், அதற்காக, அக்காலத்துஇராஜாக்கள் சூத்திரனுடைய கழுத்தை அறுத்தல் முதலான கொடிய கர்மங்கள் இக்காலத்திலில்லாமையால், முன்காலத்தை விட இக்காலம் க்ஷேமமான காலமென்றுதான் எனது அபிப்பிராயம்.

சுப்பு:—இதுவா நல்லகாலம்? ஜாதியும் போச்சுது, மதமும் போச்சுது, சாஸ்திரங்களையும், பிராமணர்களையும், தூஷிக்கும் காலமாயிருக்கிறது "குடி அரசை" பார்த்தால் அதன் உண்மை தெரியும்,

குப்பு:—நான் குடி அரசை பார்த்துக் கொண்டு தான் வருகிறேன். "குடி அரசு" உண்மை சாத்திரங்களையும், உண்மை பிராமணர்களையும் தூஷிக்கவில்லையே தூஷிப்பதாக உங்கள் கண்களுக்குப்புலனுயிருக்கலாம், அதற்குக்காரண முண்டு, உங்கள் கண்களில் பார்ப்பனீய மென்ற அக்ஞான திமிரங்கள் மூடியிருப்பதால் ஓர் மேலை தூஷிப்பது போல் தோன்றியிருக்கலாம். யதார்த்தவாதி வெகுஜனவிரோதி யென்று கேட்டதில்லையா?

சுப்பு:—என்னப்பா விதண்டாவாதம் பேசுகிருய்? மனிதர்களுக்குள் பிராமணன், க்ஷத்திரியன், வைசியன், சூத்திரன், என்ற நான்குஜாதிகளை கடவுள் படைத்தார் என்றும், அதில் பிராம்மணர்கள்தான் உயர்ந்தவர்களென்றும், வேதங்களில் கூறியிருக்க, அதை மறுப்பதும், தூஷிப்பதும் தகுதியாகுமா?

குப்பு:—பார்ப்பனர்கள் எழுதிவைத்துள்ள கட்டுக் கதைகளை பார்த்துக்கொண்டு நம் தேசமே நாசமடைந்திருக்க, நீங்கள் மோசமடைந்திருப்பது ஆச்சரியமல்ல. ஆடு, மாடு, யானை, ஆந்தை, நாய், நரி, காகம், கொக்கு, தும்பி, வண்டு, மீன், முதலை, பாம்பு, தேள், புழு, பேன், நெல், புல், தென்னை, தேக்கு, முதலிய ஓரறிவு முதல் ஆறறிவு வரையிலுள்ள சராசரப்பொருள்களை யெல்லாம், உருவம், நாமம், இனம், செயல் முதலிய பல காரியங்களாலும் சிறுகுழந்தைகளும் பகுத்துணரும்படியான தன்மையில் வகை விவரமாக சிருஷ்டி செய்துள்ள சர்வ சக்திமயனுகிய கடவுளுக்கு மனிதர்களுள் பிராமண க்ஷத்திரிய, வைசிய, சூத்ரர்களென்று நான்கு ஜாதியினர் உண்டென்று அறியும் பொருட்டு யாதாவது ஒரு அடையாளங்களை கற்பித்திருக்க முடியாமல் போய் விடுமா? ஆடு மாடு முதலியன ஜீவிகளை வெவ்வேறு ஜாதியாக அறிந்துகொள்வதுபோல் மனிதர்களுள் பல ஜாதிகளுண்டென்றறியும்படி. சில சிருஷ்ட்டியில் எவ்வித அடையாளங்களும் காணுமையால் மனிதர்கள் எல்லாம் ஒரேசாதியினர் என்று தான் நிச்சயிக்க வேண்டும். ஜாதி பேதமிருக்கின், சூத்திரனுக்கு பிராம்மண ஸ்திரீயினிடத்தும், பிராம்மணனுக்கு சூத்தி ஸ்திரீயிடத்தும், பரஸ்பரம், சரஸஸல்லாப லீலைகளில் அனுராக முண்டாகாது, யோனிப்பொருத்தமும் உண்டாகாது, சிசுவும் உற்பத்தியாகாது யானைக்கு ஆட்டினிடம் அனுராகமுண்டாகின்றவா? யோனிப்பொருத்தமுண்டா? குட்டியுண்டாகிறதா? மனிதர்களுக்குள் அவ்வாறின்றி உயர்ந்த ஜாதியார்களுக்குத்தாழ்ந்தஜாதியாரிடத்தும் தாழ்ந்த ஜாதியார்களுக்கு உயர்ந்த ஜாதியாரிடத்தும் பரஸ்பரஸய்யோக வாஞ்சையும் யோனிப் பொருத்தமும் சிசு உற்பத்தியும் உண்டாவதால் ஜாதிபேதமில்லை யென்பது வெளிப்படையல்லவா மேலும் பிராம்மணன் என்று சொல்லிக் கொள்பவன் கிருஸ்துவ மதத்தில் சேர்ந்தால் கிருத்துவனும் மகம்மதியமதத்தில் சேர்ந்தால்மஹம்மதியனும்ஆகின்ருன். ஜாதிபேதம் கடவுள் கற்பிதமென்ருல் பிராம்மணன் கிருத்துவனும்முகம்மதியனும் ஆக முடியுமா? யானை ஆட்டின் கூட்டத்தில் சேர்ந்தால் ஆடாகவும் மாட்டின் கூட்டத்தில் சேர்ந்தால் மாடாகவும் மாறிவிடவில்லையே? ஆனது பற்றி ஜாதிபேதங்கள் கடவுள் கற்பிதமல்ல வென்றும் சுயநலப்புலிகளால் ஏற்பட்டதென்றும் அறிந்து கொள்ள ஒரு சாஸ்திரமும் வேண்டுமோ?

சுப்பு:—பேஷ்; என்னமோ நியாயங்கள் சொல்லவருகின்ருய் பூணூல் உச்சிக்குடுமி முதலான சின்னங்கள் பிராம்மணச் சின்னங்களல்லவா?

குப்பு:—இது நல்ல கேழ்விதான் பார்ப்பனர்கள் பூணூல் போடுவதால் உயர்ந்தவர்களென்று கருதி பலரும் தற்காலம் பூணூல் போட ஆரம்பித்து விட்டார்கள் தாங்களும் உயர்ந்தவர்களாகவேண்டுமென்று பிரயத்தனப் படுகிருர்கள் பூணூலில் என்ன பூனைக்குட்டி இருக்கின்றதோ தெரியவில்லை. பிறக்கும் பொழுதே, பூணூல் முதலிய சின்னங்களிருந்தால், அதை பிராம்மணச் சின்னங்களென்றுஒற்றுக்கொள்ள வேண்டியதுதான். அப்படி யொன்றும் காணுமே அதைப்பற்றி பிர்ம்ம சூத்திரத்தில் கூருவதைக் கேளுங்கள் சுலோகம் (யதக்ஷாம் பரப்ரம்மம், தத்சூத்ராமிதிதாரயேத்யஸ் மின்ஸர்வமிதம் ப்ரோக்தம் சூத்ரமணிகணு இவதத் சூத்ராம் விதிதம்யேன சவிப்ரோ வேதபாரக.) (சிகாயக்ஞோப வீதாப்யாம் ப்ராம்ம்ணோ நைவ நைவச.)

இதன்கருத்து:—நாசாஹிதனுகிய பரபிர்ம சுரூபத்தை பிரபஞ்சத்தின் அஸ்திவார காரணமான சூஸ்திரஸ்வரூபி யென்று அறிந்துகொள்ளவேண்டும் எவ்வாறெனின் வெண்மை கருமை பச்சை மஞ்சள் முதலான பலநிறங்களையுடைய ரத்தினங்களை ஒரு கயிற்றில் கோர்த்துப் பார்த்தால் நிறங்களால் வெவ்வேறு பேதங்களாகத்தோன்றினுலும் அவைகளுக்கெல்லாம் ஆதாரமாயிருப்பது அந்தக்கயிறல்லவா? அதுபோல் பலவகை தோற்றங்களாகப்பிரகாசிக்கும் பிரபஞ்சத்திற்கு பரபிர்ம்மமே காரண புருஷராம். சூஸ்திர ரூபியான பிரமத்தை யாவனொருவன் அறிகின்ருனே அவனே பிராம்மணனும், (சிகாயக்ஞோப வீதாப்யாம்) என்றதால் பூணூல் உச்சிக்குடுமி முதலான சின்னங்கள் பிராம்மண சின்னங்களல்லவென்று அதை தரிப்பவர்கள் (பிராம்மணோ நைவநைவச) பிராம்மணர்கள் ஆகமாட்டார்களென்றும் ஏற்பட்டது.

சுப்பு:—அப்படி யானுல் பிராம்மணன் க்ஷத்திரியன் வைசியன் சூத்திரன முதலான பதங்கள் எதற்காக ஏற்படுத்தினுர்கள்.

குப்பு:—பிராம்மணன் முதலான பதங்கள் செய்கையைப் பொறுத்து ஏற்பட்டதாகும் அப்பதங்களின் அவயவார்த்தத்தை கேளுங்கள்,

"ப்ரம்மணி நிஷ்டவான் பிராம்மண;" ப்ரம்மணி—பிர்ம்மத்தினிடம்—நிஷ்டவான் நிஷ்டையையுடையவன், பிராம்மண-பிராம்மணனுகின்ருன்.

க்ஷதாத்தத்ராயத இதிக்ஷத்ர, தஸ்யாபத்யம் க்ஷத்ரிய, க்ஷதம் ஆபத்து த்ராயதரக்ஷிப்பவன் இதிக்ஷத்ர, தஸ்யாபத்யம் க்ஷத்ரிய க்ஷத்திரியனுகின்ருன்.

"விசித்யாபணுநிகமிதிவிச: விசஏவவைச்ய:" (வியாபாரம் செய்வதற்காக தனத்தை எடுத்துக்கொண்டு வியாபாரஸ் தலங்களில்) விச. பிரவேசித்தவன் எவனே அவன் வைசியனுகின்ருன்.

'சோசதீதி "சூத்ர" சோகிப்பவன் துக்கிப்பவன், சூத்ர சூத்திரனுகின்ருன் அதாவது எவனுயினும் சர் பிர்ம்மத்தில் நிஷ்டையுடையவன் பிராம்மண னென்றும் ஆபத்திலிருந்து ரக்ஷிப்பவன், க்ஷத்திரிய னென்றும் வியாபாரம் செய்பவன் வையிசியனென்றும் காரியாகாரியங்களை பகுத்தரியாமல் வீணுக துக்கிப்பவன் சூத்திரனென்றும் சொல்லப்படுகின்றது சூத்திரன் என்ற பதத்திற்கு பெரியோர்கள் பல வியாக்யானங்கள் செய்திருக்கின்றனர், ஆயினும் பதங்கள் உண்டானதின் காரணங்களை விளக்கிக்காட்டும் அவயவார்த்தங்களை கவனிக்குமிடத்து துக்கிப்பவன் சூத்திரன் என்று ஏற்படுகிறது.

சுப்பு:—பிரமகுலத்தில் ஜனித்தால் பிராம்மணன் என்று சொல்லக்கூடாதா?

குப்பு:—அப்படியானுல் நாம் எல்லோரும் பிராம்மணர்கள் தான் தைததிரீயோபநிஷத்தில் கூருவதை கேளுங்கள்.

யாதோவா இமானி பூதானி ஜாயந்தே யேனஜாதானி ஜீவந்தியத்ப்ரயத்யபிஸம் விசந்தித் விஜிஜ்ஞாஸஸ் வதத்ப்ரம்ம.

கருத்து:—எல்லா ஜீவிகளும் பிர்மத்தினிடமிருந்துண்டாகின்றன பிர்மத்தின் சஹாயத்தால் ஜீவக்கின்றன சர்வாதார பூதமாகிய பிர்மத்தை அறியப்பிரயத்தினப்படுவோம்.

இந்த சுருதியின் ரீதியாய் எல்லோரும் பிர்மத்திலிருந்து ஜனிப்பதால் எல்லோரும் பிராமணர்கள் தான் எல்லோர்க்கும் பிர்ம

குலந்தானென்றும் ஏற்படுகிறது. இப்பொழுது நான் தான் பிராமணன் என்று ஒருவர் மட்டும் அபிமானிக்க இடமில்லை. நான் பிராம்மணன் நீ சூத்திரன் தொடாதே தீண்டாதே யென்று விசேஷ புத்தியில்லாத நாய், பூனை, பாம்பு, முதலிய ஜந்துக்களை போல் காரணமில்லாமல் கலஹிப்பது மனித தர்மமாகுமா?

"நாஹம்மனுஷ்யோ நசதேவயக்ஷ நப்ராம்மணக்ஷத்ரிய வைசிய சூத்ர நப்ரம்மசாரீ நக்ருஹீ வனஸ்தோ பிக்ஷுர்நசாஹம் நிஜ போதரூப" என்று ஆதி சங்கராசாரியார் சொல்லுகிறார்.

இதன் கருத்து:— "நான்" மனிதனுமல்ல, தேவனுமல்ல, யக்ஷனுமல்ல, பிராமண-க்ஷத்திரிய-வைசிய-சூத்திரனுமல்ல, பிரம்மச்சாரியுமல்ல, கிரஹஸ்தனுமல்ல வானப்பிரஸ்தனுமல்ல சந்நியாசியுமல்ல, 'நான்' யாரென்றால் சத்தாகிய அறிவே 'நான்' என்பதாம். இச்சுருதியின் ரீதியாய் 'நான்' எனக்கூறும் ஆத்மாவிற்கு ஜாதி வித்தியாசங்களும், ஆச்ரம பேதங்களும் இல்லையெனப் பெறப்பட்டது.

மனிதர்களுக்குள் ஏன் சொத்தை அபகரித்தான் பூமியைக் கைப்பற்றினான் திருடினான், திட்டினான் என்று சொல்லி விவகரிப்பது உலகசம்பிரதாயந்தான், சூத்திரன் தொடக்கூடாது, தீண்டக்கூடாது வேதத்தைப்பார்க்கக்கூடாது தபஞ் செய்யக்கூடாது கடவுளை பூஜிக்கக்கூடாது நான் உயர்ந்தவன் நீ தாழ்ந்தவன் என்றுசொல்லி கலகிப்பது இந்து மதத்திலல்லாது வேறு எந்த மதத்திலாவதுண்டா? அநேக வருடங்களாக ஒரு கூட்டத்தார்களை உயர்ந்தவர்களென்று கருதி அவர்களுக்கு அடிமைகளாயிருந்து வந்ததால் இப்பொழுது பிறப்பில் உயர்வு தாழ்வில்லையென்று சொல்லுவதும், சமத்துவ உரிமை வேண்டுமென்று கேட்பதும், அவர்களும், அவர்களைப் பின்பற்றும்மற்றவர்களும் பொறுமையை உண்டு பண்ண, ஹேதுவாயிருக்கின்றதென்பதில் யாதொரு ஆச்சர்யமுமில்லை

சுப்பு:— நீங்கள் சொல்லுவது சரிதான். இதுவரையிலும் ஜாதி பேதங்கள் தெய்வ கற்பிதமென்று கருதினேன்- இப்பொழுது சில மனிதர்களால் கற்பிக்கப்பட்டதென்று தெரிந்து கொண்டேன். இன்னும் சில விஷயங்கள் தெரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது.

குப்பு;— இப்பொழுது அகாலமானதால் தெரியவேண்டிய விஷயங்களை இன்னொரு நாள் சொல்லுகிறேன். (ஸ்ரீ தரசாமி)

4ம் பக்கத் தொடர்ச்சி

கேள்வி:— உன் குழந்தை ஏன்? மஸ்லீன உடை, சில்க் உடை தரிக்கிறது.

பதில்.— அந்தக்குழந்தைக்கும் ஒரு சுதந்தரமும், சுயேச்சையும் உண்டு. அதில் நான் குறுக்கிடுவது அனியாயமாகும்.

கேள்வி:— உன் குழந்தைக்கு உள்ள சுதந்தரமும், சுயேச்சையும் இந்தியாவிலுள்ள ஒவ்வொருவருக்கும் உண்டு அவர்களுடைய உரிமையில் குறுக்கிடுவதற்கு நீர்யார்?

பதில்:— கஷ்டமாயிருக்கிறது. சுவாமிகள் மன்னிக்கவேண்டும்.

கேள்வி:— மகாத்மாவைப்பற்றி உனது அபிப்பிராயம் என்ன?

பதில்:— நான்தான் இராமேஸ்வரத்திலேயே அவருக்கு மண்டையில் மூளை இல்லை என்று சொல்லியிருக்கிறேனே!

கேள்வி:— அப்படியிருக்க ஏன் அவரை இப்பொழுது தென்னாட்டிற்குக் கூட்டிவந்து ஆட்டிவைக்கிறீர்கள்?

பதில்:— இப்பொழுது தென்னாடு இருக்கிற நிலைமையில் அவரைக் கூட்டிவந்து ஜே! போட்டால், தென்னாட்டுப் பிராமணர்களுக்குச்சிறிதுயோக்கியதை ஏற்படும்.

கேள்வி:— தேசியத்தலைவர்கள் என்பவர்கள் யார்?

பதில்: — எங்களுடையசொற்படி கேழ்ப்பவர்கள் தான். (என்று கூறினார்) இவைகளை கேட்ட மாதவர் உடனே பெருமூச்சுவிட்டு "அப்படியா" என்று கூறிவந்த மனித உருவத்தைப் பார்த்து "உன்னைத் தலைவனாகக் கொண்டிருக்கிற ஒரு நாட்டிற்கு சுயராஜ்யம்தான் என்னத்திற்கு? உன்னைத் தலைமையாகக்கொண்டு நடக்கும் மனிதர்களுக்குச்சுயமரியாதைதான் என்னத்திற்கு? அந்த நாட்டிற்கும் அந்த மக்களுக்கும் அடிமைத்தனமே நிலையானது" என்று கூறினார்.

வந்திருந்த மனித உருவம் திகைத்து நின்றது. உடனே நான் என்னையும் அறியாமல் "உண்மை வெளியாயிற்று" என்று உறக்கக்கூவினேன். உடனே என் தமையன் தம்பி! எழுந்திரு!! எழுந்திரு!!! என்று என்னை எழுப்பி "ஏன் சத்தமிட்டாய்" என்று வினவினார். அதுசமயம் கடியாரம் மணி 3 அடித்தது ஒன்றுமில்லை. இந்தியாவில் உள்ள சுயமரியாதையுடைய மக்கள் உண்மையை அறிந்து விழிப்படையக்கூடிய கனவு ஒன்று கண்டேன் எனக்கூறினேன்.

கி. ஆ. பெ. விசுவநாத பிள்ளை,
மணிவாசகத்தமிழகம் திருச்சிறுப்பள்ளி.

[6-ம் பக்கம் தொடர்ச்சி]

யுடைத்து. வாழ்க்கையில் செம்மையாய் அனுஷ்டிக்கும் அன்னியருடைய தருமத்தைக் காட்டினும் எற்றக்குறைவுடன் அநுஷ்டிக்கும் ஒருவருடைய சுயதருமமே சிறந்ததாகும்.

(3) பார்ப்பனரல் லாதாருக்குச் சமூக வாழ்க்கையிலும் மற்ற .விஷயங்களிலும் அநேககுறைகள் இருக்கின்றன வென்பது ஒப்பத்தக்கது.இவைகளை நீக்குதற்கு அரசாங்கத்தாருடைய சகாயத்துஅன் பார்ப்பனருடை மனமார்ந்த உதவியும் அவசியமாகும்.

(4) பார்ப்பனர் இந்நாட்டில் மற்ற தமிழ்மக்களுடன் நேசமாகவும் சமரசமாகவும் வாழவேண்டியவராவர். இவ்வரசாங்க மாவது வேறு அன்னிய வரசாங்கமாவது தங்களுக்கு ஊழியம் கொடுத்து என்றும் தங்களைக் காப்பாற்றி வருமென வெண்ணி அன்னியருக் கடிமை பூண்டு வாழக் கருதுவது அவர்கள் பால் தவறாகும்.

(5) பாரப்பனரிற் பலர் இந்நாட்டுக்கும் தேசத்துக்கும் அரிய தொண்டியற்றி யுளாராயினும் அவர்களிற் சுயநலமும் அடிமைப்பான்மையும் கொண்ட பல பிரமுகர்கள் இருந்து வருவதை யவர்கள் உணரவேண்டும். நமது தேசத்தில் ஒத்துழையாமை இயக்கம்தலைதூக்கிய நாளில் பிறநாடு பலவேகி ஆங்குநம்மையும்நம்மியக்கத்தையும் குறைகூறி யெள்ளி நகைத்தும் உலக அநுதாபம் நம்மையடையவொட்டாமற் றடுத்தும் இவ்வன்னிய அரசாட்சிக்கு வலதேடிக்கொடுத்தபுண்ணியர் அதிகனம் சீனிவாச சாஸ்திரியாரும் தங்கமாலைகளையும் நவரத்தினங்கள் பதித்த கண்டிகளையும் வடமொழிச் சுலோகங்களையும் நெடு வழி சுமந்து சென்று உலகத்தார் முன்பு நமது தாய் நாட்டின் சுயமதிப்பைக் குலைத்து நம்மை நகைப்புக்கிடமாக்கிய மகான் திவான்மகதூர் அரங்காச்சாரியாரும தமிழ்நாட்டுப் பார்ப்பனச் சமூகமீன்ற புனிதரொன்பதை இவர்கள் என்றும் மறந்து விடலாகாது

7) பார்ப்பனரல்லாத சமூகத்தை இருகக்ஷியினராகப் பிரிக்க முயலுவதும் வாய்க்கூச்சலிடாமல் அமைதியாய்க் கிடக்கும் பார்ப்பனரல்லாதாருக்குத் தாங்கள் தான் சரியான பிரதிநிதிகள் என்றும்அதர்கள்குத்தங்கள் ஆதிக்கத்தைவிரும்புகிறார்களென்றும் ,சொல்லத்துணிவதும் தங்களுக்கு அடாததாகு மென்பதைப் பார்ப்பனர்கள் உணரவேண்டும். நவசக்தி.

சேலம்

சுத்த கதர் ஜவுளிகள்.

கல்யாண காலங்களுக்காக ஸ்பெஷலாய்

பட்டு ஜரிகை பேட்டுகளினால் தயார்செய்த கதர்.

நமது சொந்த தரிகளால் தயார் செய்யப்பட்ட நைஸ் நூலினால் பலவிதமான ஜரிகை பேட்டுகளில் தயார்செய்த 54" 4½ 5, 6, 7, 8, 9, 10 முழம் வேஷ்டி நகங்களும் 45×5 ஜரிகைப்பேட் மேல் அங்கவஸ்திரங்களும் சேலம் பட்டு குண்டஞ்சு, கரையில் 7, 8, 9 முழம் வேஷ்டிகளும் பலவிதமான கலர்களில் தயார்செய்த 45×9 கெஜம் சில நகங்களும் ஜெமக்காளங்களும் கைவசமிருக்கின்றன. விலை ஜாப்தாவுக்கு எழுதவும்.

அத்தாக்ஷி பத்திரம்.

☞ ஸ்ரீமான் C. V. ஜெயகோபாலசெட்டியார் கைநூலால் கைதரியால் தயார் செய்யப்பட்ட சுத்த கதர் துணிகளையே உற்பத்திசெய்து நியாயமான விலைக்கு விற்றுவருகிறார். (Sd) S. Ramanathan, காரியதரிசி கதர் இலாக்கா.

C. V. ஜெய கோபால செட்டியார்,
கதர் வியாபாரம், சேலம்.

சர்க்காருக்கு உடந்தையாக இருந்தது உண்டா இல்லையா?

ஸ்ரீ ஐயங்காருக்கு சில கேள்விகள்.

ஸ்ரீ ஷண்முகம் செட்டியாரின் தீரமொழிகள்.

பம்பாய், ஜூன் 2—"இந்தியன் நாஷனல் ஹெரால்டு" பத்திரிக்கையின்பிரதிநிதியொருவர் ஸ்ரீ. ஆர். கே. ஷண்முகஞ் செட்டியாரை பேட்டி கண்டபொழுது பம்பாயில் கூடி அகில இந்திய காங்கிரஸ் காரியக்கமிட்டியின் கூட்டத்தைப்பற்றி தமது அபிப்பிராயத்தை பின்வருமாறு தெரிவிக்கிறார். "சென்னை சுயராஜ்யக் கட்சியினர் சம்பந்தமாக காரியக்கமிட்டியில் நடைபெற்றவைகளுக்கும், அதன் பயனாக சின்னாட்களாக ஏற்பட்டுவரும் அபிப்பிராய பேதங்களுக்கும் காங்கிரஸ் தலைவர் ஸ்ரீ. ஸ்ரீனிவாச ஐயங்காரின் அக்கிரமச் செய்கைகளே காரணம். சென்னை சட்டசபையில், மந்திரிகள் சம்பந்தமாக சுயராஜ்யக் கட்சியார் நடந்துகொண்டதைப்பற்றி அனைவரும் அறிவார்கள். அவர்கள் அப்படி செய்தது, ஸ்ரீ. ஐயங்காரின் சம்மதமின்றி செய்திருக்கமுடியாது. சென்னை சுயராஜ்யக் கட்சியாரின் நடத்தையைப் பற்றி காரிய கமிட்டிக்கூட்டத்தில் விவாதம் நடந்தபொழுது, விஷயத்தைப்பற்றி ஸ்ரீ. பிரகாசத்துடன் கலந்து ஆலோசனை செய்து ஒரு முடிவிற்கு வருகிறேனென்று தலைவர் கூட்டத்தில் சொல்லியது மிகவும் ஆச்சரியத்தையே விளைவிக்கின்றது.

சென்னை சுயராஜ்யக் கட்சியார்மீதுகாரிய கமிட்டியில் கொண்டுவரப்பட்ட கண்டனத் தீர்மானம் தலைவர் ஸ்ரீ. அய்யங்கார் மீது கொண்டு வரப்பட்டகண்டனத் தீர்மானமாகவே கருதப்படும். ஏனெனில் சென்னை சுயராஜ்யக் கட்சியாரின் நடத்தைக்கு அவரே பொறுப்பாளி. அவரே காரணம். காரியக் கமிட்டிக்கூட்டத்தில் தலைவர் ஸ்தானத்தைக் காலி செய்து, அங்கத்தினர்களோடு உட்கார்ந்த ஸ்ரீ. அய்யங்கார், தமது கட்சியாரின் நடத்தைக்குத் தக்க சமாதானம் சொல்ல வேண்டியதிருக்க, வாய்மூடி மௌனியாய், காரியக் கமிட்டியில் இருந்தது மிகவும் கண்டிக்கத்தக்கதாகும். சென்னை மாகாணத்தில் மாஜி அட்வகேட் ஜனரலும், பிரபல சட்ட நிபுணரென்றும் சொல்லப்பட்ட ஸ்ரீ. ஐயங்காரின் தலைமையில் சென்னை சுயராஜ்யக் கட்சியார் செய்துள்ளதை யோக்கியதையுள்ள எந்த மனிதனும் சகிக்கமாட்டான். சென்னை சுயராஜ்யக் கட்சியாரின் நடத்தையைக் கண்டித்துப் பேசும் பொருட்டு பலர் முயற்சித்து, அவர்களுக்கு செவிசாய்க்காது காரியக்கமிட்டி நடந்து கொண்டது மிகவும் கண்டிக்கத்தக்கதே.

ஜஸ்டிஸ்கட்சியாளர், நிச்சயமாய் தாங்கள் மந்திரி பதவியை யேற்றுக் கொள்ளமாட்டார்களென்று உறுதிகூறாததால் சென்னை சட்டசபையில் சுயராஜ்யக் கட்சியார் மந்திரிகளுக்காதரவளித்தார்கள் என்ற ஒரு நொண்டிச் சமாதானத்தை அவர்கள் சொல்லிவருகின்றனர். ஜஸ்டிஸ் கட்சியார் இது சம்பந்தமாக வாக்குறுதி கொடுத்தாலும் சரியே, இல்லாவிடினும் சரியே. தேசீய காங்கிரஸின் ஆணைக்கு, விரோதமாக தங்களுடைய எதிர் கட்சியாராகிய மந்திரிக் கட்சியாருடன் ஒத்துழைப்பது மிகவும் விந்தையாகவே விளங்குகின்றது. தேர்தல்களில் ஜஸ்டிஸ் கட்சியாருடன் எதிர்த்துப் போராடுகையில் சுயராஜ்யக் கட்சியார், தங்கள் முட்டுக்கட்டை யென்ற வேதவாக்கைச்சொல்லியே வெற்றியடைந்தனர். வெற்றியடைந்தபின், தேச ஜனங்களிடத்தில் தேர்தல் காலத்தில் என்ன சொல்லி வந்தோம் என்றதை மறந்து விட்டனர். அதற்கு மாறாக தற்பொழுது நடந்து வருவதை உணர்ந்தார்களுமில்லை. அதற்குப் பற்பல நொண்டிச் சமாதானங்களை அனுதினமும் சிருஷ்டிக்கின்றனர்.

இதெல்லாம் ஸ்ரீ. ஐயங்காரின் கூர்மையான புத்திக்கு எட்டவில்லைபோலும். சபர்மதி ஒப்பந்தத்தின் பொழுது ஏதேதோ பேசிவிட்டு ஸ்ரீ. ஐயங்கார் காங்கிரஸ் தலைவரானவுடன் இரட்டை யாட்சியை நடைபெறச்செய்வதற்கு ஒருமுக்கிய தூண்டுகோலாகவிளங்குகிறார். ஸ்ரீ. ஐயங்காருடைய சொந்தமொழிகளிலேயே சொல்ல விரும்பின "தற்பொழுது தேசத்தை அபஜெயத்திற்காக தயார் செய்கிறார்" என்றே சொல்ல வேண்டும். அவரை காங்கிரஸை விட்டு விலகச்செவதற்கு வேண்டிய முயற்சிகளை நாம் செய்யவேண்டும்"

திரு. ஹார்னிமன் துரை அவர்கள்:—

ஐயங்கார் பெரிய தலைவராக இருக்கலாம். ஆனால், தேசம் அவரைவிட மிகப் பெரியது. சில தினங்களுக்குமுன் சீனிவாச ஐயங்கார் பேசியமொழிகளைப் படித்தவர்கள் இதே முடிவுக்குத்தான் வருவார்கள். தேச நன்மை என்று தவிர எந்த இயக்கமும் எந்தத்தலைவரும் நமக்குப்பெரியதல்ல, ஐயங்கார் கோபமடைந்ததைப்போல் வேறு எவரும் கோபமடைய முடியாது. பணம் கொடாததால் பிரகாசம் கோபித்துக்கொள்வதாகக் கூறுகிறார். இதே ஐயங்கார் சென்ற தேர்தலின் பொழுது ஒத்துழைப்புக் கக்ஷியார் பணம் கொடுத்து வேலை செய்வதாக நமது பம்பாயில் சொல்வதை பம்பாய் வாசிகள் மறந்திருக்கமாட்டார்கள். அம்முறையையே இன்று இருவரும் கையாளுகிறார் போலும், ஆங்கிலேயர்களைப் பற்றி ஐயங்கார் கூறியதற்கு ஸ்ரீ பி. எப். புரூச்சர் தக்க விடையளித்து இருக்கிறார். ஆயினும், திரு. சி. எப். ஆண்ட்ரூஸ் போன்றோர்களையும் ஐயங்கார் தோஷம் கூறிய பாவத்திற்கு இந்தியர்களிடம் மன்னிப்புக் கேட்டுக்கொள்ள முன்வர வேண்டும். ஸ்ரீ பிரகாசத்தின் மீது குற்றம் கூற ஐயங்காருக்கு எவ்வித யோக்கியதையுமில்லை.

ஒரு வேடிக்கை.

சென்னையில்செய்த ஒரு பிரசங்கத்தில் தமது தலைமை பதவியை ஒப்புக்கொள்ளாவிட்டால் உடனே தாம் அப்பதவியை விட்டுவிட்டு மீண்டும் வக்கீல் தொழிலில் பணம் சம்பாதிக்கப் போகிறேன் என்றாரும் (இப்போது வக்கீல் தொழிலில் எல்லாம் லக்ஷமாய் சம்பாதிக்கவில்லைபோலும்) இந்த கௌரவமான மொழியை எவரும் விரும்பார். இவரைப்போய் பேட்டிகண்டு வேண்டிக்கொண்டவர்களை நமக்கு இன்னாரென அறிவிப்பாரா? மகாத்மா காந்தியடிகள் ஒருவரைத் தவிர, இதுவரையில் இந்த நாட்டார் தலைவராக இருங்கள் என்றுவேறு எவரையும் கூறியதே கிடையாது. இந்தப் பெரிய நாட்டின் மானத்தைக்காப்பாற்ற வரும் தேசீய வாதிகள் உடனே ஸ்பெஷல் கான்பரன்ஸைக் கூட்டி இம்மோசமான முடிவைப்பற்றி ஆலோசிக்க விரும்புகிறேன்.

இதுவரையில் ஐயங்காரின் நடத்தையைக்கண்டித்த மற்றவர்களைவிட நமது R. K. ஷண்முகம் செட்டியார் அவர்கள் கண்டித்ததே ஐயங்கார்கட்கு உடனே பிரமாதமாகக்கோபமவந்துவிட்டது. திருசீனிவாச ஐயங்கார் A. ரெங்கசாமி, ராமதாஸ்பந்துலு முதலிய சகல பார்ப்பனர்களும், அவர்கள் பத்திரிகைகளும் ஒரேமுகமாக திரு. செட்டியாரைக் கண்டிக்க ஆரம்பித்தார்கள். இப்பிதற்றல்களுக்கு பம்பாயில் கூடிய 3-தேதி கூட்டத்தில் திரு. R. K. ஷண்முகம்செட்டியார் சரியான பதிலளித்தார்.

பம்பாய், ஜூன் 4—

ஸ்ரீ. ஆர். கே ஷண்முகம்செட்டியார்:—

ஹிந்து முஸ்லிம் வேற்றுமைக்கு மூன்று வித காரணங்களிருப்பதாக மூன்று வகையாக அவர் கூறினர். மதம், கல்வி முதலியவைதான் முதற்காரணமென்கின்றனர். இரு சமூகத்தினருக்கும் ஏற்பட்டுள்ள பிணக்கு உண்மையா என்பதற்குக்கிராமங்களில் போய்ப்பார்த்தால் உண்மையான நிலையை நன்றாகத் தெரிந்து கொள்ளலாம். நமது கருத்திற்கு நேர் மாறாக ஒற்றுமையோடவே வாழ்ந்து வருவதைக் காணலாம். மசூதி முன் வாத்தியம் வாசிப்பதைப்பற்றி யோசிப்போம். பிணக்கை நீடிக்கச் செய்வதற்கு அது ஒரு காரணமாயிருக்கிறதே தவிர, அதுவே முக்கியகாரணம் என்று சொல்ல முடியாது. ஹிந்து முஸ்லிம் வேற்றுமைக்கு ராஜ்ய விஷயமும் அடிப்படையான காரணமல்ல. இதுவே காரணமாயி

ருக்குமாகில் சட்ட சபைகளில் சில அதிகப்படியான ஸ்தாபனங்களைக் கொடுத்தால் ஒருவாறு முடிந்துவிடவேண்டும். ஒரு சமூகத்திற்குச் சில அதிகப்படியான ஸ்தானங்கள் கொடுப்பதால் மற்றொரு சமூகத்திற்குப் பெரிய ஆபத்து வந்து விடாதென்பதை இரு சமூகத்தவர்களும் அறிந்துகொள்வார்களென்றே நம்புகிறேன். ராஜீயச் சண்டையை விட பொருளாதாரச் சண்டையே பெரிது. ஆனால் இந்த உண்மைக் காரணத்தை வெளியிட்டு இரு சமூகத் தலைவர்களும் தைரியங்கொள்வதில்லை. நன்மைக்காகவோ அல்லது தீமைக்காகவோ மனிதர்களிடம் ஒரு குணம் இயற்கையாக இருந்து வருகிறது. ஒரு ஸ்தானம் பெறில் அந்த ஸ்தானம் சம்பந்தப்பட்ட அதிகாரத்தையும் செல்வாக்கையும் அடைய முயற்சிப்பதை விட்டு, அந்த ஸ்தானத்தைக்கொண்டு எவ்வளவு செல்வாக்கையும் அதிகாரத்தையும் பெறமுடியுமோ அவ்வளவையும் பெற ஆசைப்படுகின்றனர். நான் பள்ளிக்கூடத்தில் வாசித்துக்கொண்டிருக்கும்பொழுது ஒவ்வொரு வகுப்பிலும் பிராமணர் இவ்வளவு பேரிருக்கின்றனர், பிராமணரல்லாதார் இத்தனை பேரிருக்கின்றனர் என்று கணக்கெடுத்தார்களென்பது எனக்கு நினைவிருக்கிறது.

சர்க்கார் வெளியிடும் ஒவ்வொரு அறிக்கையிலும் சர்க்கார் உத்தியோகத்திலுள்ளவர்கள் இத்தனைபேர் அவர்களில் ஹிந்துக்கள் தொகை இன்னது, முகம்மதியர்கள் தொகை இன்னது என்று விவரமாக வெளியிடப்பட்டிருப்பதைக் காணலாம். சென்னையிலிருப்பதைப்போல பெரும் பான்மையோராக பார்ப்பனர் உத்தியோகம் வகித்துவருகின்றனர். எனவே சர்க்கார் உத்தியோகங்களில் சிறுபான்மையோராக இருக்கின்ற பெரும்பான்மையான வகுப்பினர் தங்களுக்குரிய பாகத்தை சர்க்கார் உத்தியோகங்களில் பெற முற்படுகின்றனர். சமூக வேற்றுமை சம்பந்தப் பட்டவரையில் தேசத்தில் ஒற்றுமையை நிலைக்கச் செய்ய அதிக சிரமமெடுத்துக் கொண்டிருக்கிறதென்பது உண்மை. கூட்டுவாக்காளர் தொகுதியை நடைமுறையில் கொண்டுவருவதில் பல கஷ்டங்களிருக்கின்றன. அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி நிறைவேற்றியுள்ள தீர்மானத்தை நடத்திவைப்பதில் இரு சமூகத்தினரும் வெகு சாமர்த்தியமாக நடந்துகொள்ள வேண்டியிருக்கிறது;

சென்னை சுயராஜ்யக்கட்சி

“இப்பொழுது சென்னை சுயராஜ்யக்கட்சியாரின் நடத்தையைக் கவனிப்போம். சட்டசபையிலுள்ள பிரபல காங்கிரஸ் தலைவர் காங்கிரஸ் கொள்கைப்படி மந்திரி சபையை அமைக்க மறுத்து விட்டார். அதுபோலவே மற்றொரு கட்சியின் பிரபல தலைவரும் மந்திரி பதவியை ஏற்றுக்கொள்ளத் தமது கட்சிக்குப் போதிய பலமில்லையென்பதை அறிந்து கொண்டார். பிறகு கவர்னர் செய்ய வேண்டியது என்ன? மற்றொரு தலைவரைப் பார்க்கவேண்டியிருந்ததோடு அந்தத் தலைவர் சொன்னபடி நடக்கக்கூடிய கட்சியொன்றையும் சிருஷ்டிக்கவேண்டியிருந்தது. சென்னை சுயேச்சைக் கட்சி அமைக்கப்பட்டதின் ரகசிய சரித்திரத்தை எழுதினால், காங்கிரஸ் தலைவர்கள் கௌரவமாக நடந்ததின் உண்மையைக் கூற தைரியமாக முன் வந்தால், சென்னை சுயராஜ்யக் கட்சியார் அக் கட்சியை சிருஷ்டிக்கவும் அந்த சுயேச்சைக் கட்சியினரை மந்திரிகளாக்கவும் பட்ட பாட்டை உலகம் தெளிவாக அறிந்துகொள்ளும். ஆனால் அதைப்பற்றி அதிகமாகச் சொல்லிக்கொண்டு போக நான் விரும்பவில்லை. யாருடைய உதவியாலோ அந்தக் கட்சி சிருஷ்டிக்கப்பட்டதென்பதை மாத்திரம் வைத்துக்கொள்வோம். தங்களுக்குக் கிடைத்த முதல் சந்தர்ப்பத்திலேயே இப்பொழுதுள்ள மந்திரி சபையை ஒழிக்கவேண்டியது காங்கிரஸ் கட்சியின் கடமை யல்லவா? வரவு செலவுத் திட்டம் சபையில் விவாதத்திற்கு வந்தபொழுது முதல் சந்தர்ப்பம் கிடைத்தது. அதைத்தான் நழுவ விட்டு விட்டாரென்றால் மற்றொரு கட்சி மந்திரிகளின் மீது கண்டனத் தீர்மானம் கொண்டு வந்தபோது காங்கிரஸ்காரர்கள் நடுநிலைமை வகித்து விட்டனர். இவ்விதம் நடு நிலைமை வகித்தால் அம்மந்திரி சபையை நிலைக்கச்செய்ததோடு இரட்டையாட்சியையும் நிலைக்கச்செய்தனர். ராஜீயக் கட்சிக்கு விரோதிகளென்று சொல்லும் மற்றொரு கட்சியினர் தாங்கள் மந்திரி சபையை ஏற்றுக்கொள்ளப்போவதில்லையென்று கூறினர். தேர்தலுக்குமுன் உங்கள் ராஜீய விரோதிகளோடு இரட்டையாட்சியை ஒழிப்பதற்காகப் போராடினீர்கள். ஆனால் உங்கள் ராஜீய எதிரிகள் இதுவரையில் காதினால் கேட்கக்கூட இராத ஒரு காரியஞ் செய்தனர், இரட்டையாட்சியை ஒழிப்பதற்காக தங்களோடு ஒத்துழைக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டனர்.

ஒருவர்:—நீர் ஜஸ்டிஸ் கட்சிக்காரர்.

ஸ்ரீ செட்டியார் “தற்சமயமுள்ள நிலைமையில் “காங்கிரஸ்” காரனாயிருப்பதைவிட “ஜஸ்டிஸ்” கட்சிக்காரனாயிருப்பதேமேல். சென்னை சுயராஜ்யக் கட்சியின் நடத்தைக்குக் காரணம் கூற வந்த “காங்கிரஸ்” தலைவர்களுடைய பேச்சிலிருந்து ‘ஜஸ்டிஸ்’ கட்சியால் சபை கலைக்கப்பட்டு விடில் வாக்காளர் முகத்தில் எப்படி விழிப்பதென்ற பயத்தின் காரணத்தினாலேயே என்பது நன்றாகத்தெரிகிறது. வாக்காளர்கள் முகத்தில் விழிப்பதற்கு வெட்கப்பட்ட ஒருவர் பெரிய தேசிய இயக்கமாகிய காங்கிரசிற்கே விரோதமான காரியங்களைச் செய்துவருகிறார். சட்ட சபையைக் கலைத்து விடுவதால் ஏற்படுவதென்ன? கவர்னர் இரட்டை ஆட்சியை ஒழித்துவிடுவதா என்பதைப் பற்றி வாக்காளரைக் கேட்கும் நிலைமை ஏற்படும். இப்படிப்பட்ட அருமையான சந்தர்ப்பத்தை சென்னை சட்ட சபை காங்கிரஸ் கட்சியினர் அழித்து விட்டனர். இவ்விஷயத்தைப்பற்றி யோசித்து முடிவு கூற காரியக்கமிட்டிக்கு எவ்வித அதிகாரமுமில்லை. இவ்விஷயத்தில் தலைவர் நடந்துகொண்ட விதமென்ன? விவாதத்தை இனி விட்டு விடவேண்டுமென்று தலைவர் கூறுகிறார். நானும் அதை ஒப்புக்கொள்ளுகிறேன். யார் அதை விடவேண்டியவரோ அவர் விடவேயில்லை இப்பொழுது செய்யவேண்டிய முக்கிய வேலை உடனே அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியைக் கூட்டி யோசிக்க வேண்டியதுதான். அப்படிச்செய்கிறவரையில் இவ் விவாதத்தை விட்டுவிட வேண்டுமென்று வீணாகக் கூறுவதில் பயனில்லை. நமது பிற்காலத்தில் எவ்விதக்கொள்கையை அனுசரிப்பதென்பதைப் பற்றியும் நாம் யோசிக்கவேண்டியிருக்கிறது. ராயல்கமிஷன் வருகிறது. அதை ஏற்பதா எதிர்ப்பதா என்பதும் திட்டமாகத் தெரிந்துவிட வேண்டும். நாம் சர்க்காரோடு ஒத்துழைக்கப்போகிறோமா முன்பு நடந்தவைகளையெல்லாம் மறந்துவிடப் போகிறோமா? காங்கிரஸ் தலைவர் சொல்லும் ‘விவாதத்தை விட்டுவிடுங்கள்’ என்றதை சர்க்காரிடம் காட்டப்போகிறோமா? (சிரிப்பு) நாம் ஒத்துழையாதாராயிருப்பதா? என்ற விஷயங்களையும் யோசிக்கவேண்டியிருக்கிறது.”

ஸ்ரீமான் ஹார்னிமான். ஸ்ரீமான் செட்டியாரை ஆதரித்துப் பேசினார். பிறகு கூட்டம் கலைந்தது.

கோயமுத்தூர்.

ஸ்ரீமதி லலிதாம்பாள்— திரு. பாலசுந்திரம் செட்டியார் அவர்களின் மனைவியாரும், நமது பார்ப்பனரல்லாதார் சங்கத்தின் உபத் தலைவரான உயர் திருவாளர் V. வெரிவாடு செட்டியார் அவர்களின் புத்திரியுமான ஸ்ரீமதி லலிதாம்பாள், கோயமுத்தூர் ஜில்லா கல்விச் சபையில் ஒரு அங்கத்தினராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

தக்க கல்வி வன்மையுடைய ஸ்ரீமதி லலிதாம்பாள் கல்விச் சபைக்குத் தெரிந்தெடுக்கப்பட்டது மிகவும் பாராட்டத்தக்கது, இவர் இண்டர்மீடியேட் வரை படித்திருப்பதுடன் தாய் பாஷையினும் திறமையுடையவர் சிறப்புற்ற தேவாங்க ஜாதியின் மரபில் பொது ஸ்தாபனங்களில் நியமிக்கப்பட்ட ஸ்திரி அங்கத்தினர் பதவியானது இதுதான் முதல்தடவை யாகும். இந்நியமனம் நகர வாசிகட்கும் ஜில்லா வாசிகட்கும் மிக்க மகிழ்ச்சியையும் பெருமையையும்தருகிறது. இந்த அம்மையார் இப்பதவியேற்ற பிறகு பெண் கல்விக்கான முற்போக்குகள் ஏற்படலாம் என நம்புகிறோம்.

(நமது நிருபர்)

திருநெல்வேலி ஜில்லா
ஆதி திராவிடர் மகாநாடு
உயர்திரு சுவாமி சகஜானந்தம் M.L.C. அவர்கள் தலைமை வகித்தார்.

21—5—27 சனியன்று கொழும்பு கேம்பல்பிலேஸ் என்னுமிடத்திற்கு அருகிலுள்ள பௌத்த மண்டபத்தில் மகாநாடு கூடிற்று ஏராளமான சமூக பிரதிநிதிகளும் ஏனையோர்களும் விஜயம் செய்திருந்தார்கள். மகாநாடு உபதலைவர் ஸ்ரீ சுவாமிகள் மிகவும் சொற்பொழிவு நிகழ்த்தினார். சமூக முற்போக்கிற்கான அநேக தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. திரு. சுவாமிகளின் அறிய ஊழியம் மிகவும் பாராட்டத்தக்கது.

சேலம்

நார்பட்டுப் புடவைகள்

சாயம் கெட்டி! விலை சாசம்!!

நமது சொந்த தறிகளால் தயார் செய்யப்பட்ட அழகிய பளபளப்பான கண்களைக்கவரும் பல கலர்களில், பீஸ்ன்களிலும், கறைகளிலும் பேட்டுவைத்தும், உடலில் பவளக்கொடி, நந்து கம்பிகளிலும் தயார் செய்யப்பட்ட 2¼ முழம் அகலமும் 18 முழம் நீளமுமுள்ள பலகலர்களில் சேலைகளும், 2½ முழம் அகலம் 12முழம் 14முழம் சேலைகளும், 30 அல்லது 33 இன்ச் அகலம் 9 கெஜம் நீளம் பல கலர்களில் பல ரகங்களில் பாவாடைகளும், 7½ கெஜம் நீளம் 1 கெஜம் அகலமுள்ள பலவித சித்தாடைகளும், ஜாக்கட், சர்ட், ரவிக்கை ரகங்களும், பட்டு லேஞ்சி 5 முழம் முதல் 6 முழம் வரையிலும், சாதா பீஸ்ன். சன்னகம்பி வைத்தும் கராச்சி பேட்டு வைத்தும், இன்னும் நார் பட்டுகளில் சம்பந்தமான அநேக ரகங்களும் ஜோகர்ஜான் புடவைகளும் தயார்செய்கிறோம். நூல் ரகங்களிலும் தயார் ஆகிறது. தேவைக்கு கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதிவிலை விபரம் தெரிந்து கொள்ளலாம்.

(மெடல் சர்ட்டிபிகேட் பெற்ற)

K. R. Chinnasamy Chetty.
Sidda Chetty & Co.
Artificial Silk Cloth Merchant, Gogai Salem. (S. India)

கணித சோதிடம்

பரசித கணிதப்படி கணனஞ்செய்து பலன்கள் கூறப்படும். ஒரு வருஷத்திற்கு மாதவாரி பலன்கள் நுட்பமாயும் விவரமாயும் எழுதி அனுப்ப ரூபாய் இரண்டு. ஆருடம் 5 கேள்விகளுக்கு விவரமான பதில் எழுதி அனுப்ப ரூபாய் ஒன்று. விவாக விஷயம் ரூபாய் ஒன்று. விவாக விஷயத்தைப்பற்றி நாங்கள் எழுதி அனுப்புவதைக் கொண்டு பெண்ணுக்குப் புருஷனும், புருஷனுக்குப் பெண்ணும் இன்னாரென்று வெகு சுலபமாய் நிச்சயிக்கலாம். எங்களிடம் அருமையான பூர்வீக சோதிட நூற்கள் பலவுள்ளதால் நாங்கள் எழுதி அனுப்பும் பலன்கள் பொதுப்பலன்களாயிராமல் விவரமாகவும் சாஸ்திரீகமாகவுமிருக்கும். உங்கள் ஜாதக நகலாவது கடிதம் எழுதும் நேரத்தையாவது தெரிவியுங்கள்.

தே. ஆறுமுக செட்டி,
முதலியார் பேட்டை, புதுச்சேரி.

மனமறி நூல்

ஒருவர் மனதில் நினைத்ததை இன்னதென்று தெளிவாய்க்கூறும் அருமையான ஆருட சாஸ்திரம். வடமொழி நூலை ஆதாரமாகவுடையது.

விலை ரூபாய் ஒன்று.

ஜோதி சாஸ்திரம்

உபாத்தியாயரின்றி 30 நாளையில் ஜோதிஷம் கற்கலாம் எல்லா ஜாதகங்களுக்கும் பலன்கள் சொல்லக்கூடும். பஞ்சாங்கமின்றி எந்த ஜாதகமும் கணிக்கலாம். விலை ரூபாய் ஒன்று

மு. வடிவேல் செட்டி,
110, ஈஸ்பரன் தர்மராஜா கோவில் வீதி
புதுச்சேரி.

அகஸ்தியர்

நாது சஞ்சீவி லேகியம்.

மிகுந்த பலத்தையும் வீறிய விருத்தியும் சரீர புஷ்டியும் உண்டாக்குவதுடன் இந்திரியஸ்கலிதம், நரம்புத்தளர்ச்சி, அஜீர்ணம், மலபந்தம், பித்தமயக்கம், பசியின்மை, கைகால் அசதி, இடுப்புவலி முதலான துர்க்குணங்களை, நிவர்த்தித்து சரீரதிடகாத்திரம் உண்டாக்கும்.

10-பலம் லேகியம் டின் 1-க்கு விலை ரூபாய் 2.
தபாற் செலவு— அணு 6.

டி. என். ஜி. பிள்ளை,
பெரிய கடைவீதி, திருச்சி.

சந்தா நேயர்களுக்கோர் அறிவிப்பு

நாம் இதுவரை வெளியூர்களில் சந்தா பணம் வசூலிக்கவாவது, விளம்பரப்பணம் வசூலிக்கவாவது ஒரு ஏஜண்டுக்காவது அதிகாரம் கொடுக்கவில்லை. இப்படி இருக்க "குடி அரசி"ன் பெயரைச் சொல்லி சந்தா சேர்ப்பதாக நேயர்களிடமிருந்து பணம் வசூலித்து விடுகிறார்களென்று கேள்விப்படுகிறோம். ஆகையால் நேயர்கள் யாரிடமாவது பணத்தைக் கொடுத்து விட்டு எமது காரியாலயத்திலிருந்து பத்திரிகையை எதிர்பார்க்க முடியாது. ஆகையால் இவ்வித அசம்பாவிதங்களுக்கு நேயர்கள் ஏமாந்து போகாமல், சந்தாதொகை முதலானதுகளை நேரிலேயே அனுப்பி விடுமாறு வேண்டுகிறோம்.

மானேஜர்
"குடி அரசு", ஈரோடு.

ஸ்வராஜ்யத்தைப்பற்றி மகாத்மா.

காந்தி என்ன சொல்கிறார் என்று அறிய வேண்டுமானால் "விபாசகசோலை" என்ற நூலை உடனே படியுங்கள். இதில் தேசாபிமானத்தைப்பற்றி பல அறிய ரஸமான விஷயங்கள் காணப்படும். தேசாபிமானத்தையும், மதாபிமானத்தையும் விரும்பும் ஒவ்வொரு இந்து முஸ்லீம்களுக்கும் இந்நூல் மிகவும் அவசியம். டாக்டர் பி. வரதராஜுலு அவர்களின் முன்னுரையுடன் கூடியது. விலை ரூ. 1.

சொற்ப பிரதிகளே கைவசமிருக்கின்றன

வ. மி. ஷம்சுதீன் சாஹிப்,
(ஆக்கியோன்)
தபாற்பெட்டி நெ. 339,
கொளும்பு.

சேலம் மாம்பழம்.

தினசரி நிலவரத்திற்கு முதல்தரமாக பொருக்கி எடுத்தனுப்புகிறேன். முதல்தாம் குறிப்பிட்ட ஸ்டேஷனுக்கு பாக்கிங் அண்டு ரெயில்சார்ஜ் சேர்ந்து 100 க்கு ரூ. 7. 2-ம் தாம் 100 க்கு ரூ. 5, ஒட்டுமாங்கன்று சீமை காய்கறி புஷ்பவிதைகளுடைய 1927வருஷத்திய கேட்லாக் இனும்.

ச. கோ. இ. காதர்மீரா சாயபு,
ஹெட் நர்சரிதோட்டம் சேலம்.

புத்தக விளம்பரம்.

திகம்பர சாமியார் பால்ய லீலை	அணா	12
தமிழ் வியாசங்கள்	,,	9
ராம்மோகனன் & கங்காதரன்	,,	7
ஹம்ஸதேவி & பெண்புத்தி பிரகாசிகை	,,	4

ஆனந்த நிலையம் திருச்செங்கோடு.

குறைந்த விலையில் மிகச் சிறந்த ஸில்க்!

அமெரிக்கன் ஸில்க்.

துய்ய வெள்ளை, திக்கான பட்டு, தினசரி சலவை செய்யலாம். 5 முழ நீளம் x 40 இஞ்சி அகலமுள்ளது நீடித்த உழைப்பிற்கு! உத்தரவாதம்.

கே. எஸ். முத்தையா கம்பெனி, தபாற் பெட்டி 99, சென்னை.

இலவம் பஞ்சிற் றுயில்.

மெத்தைக்கு இலவம் (சில்க்) பஞ்சு வெளியூர்களுககு குறித்த காலத்தில் அனுப்ப முடியும். மொத்தமாய் வாங்கினால் விலை சரசம்.

சி. சுப்பைய முதலியார்
மண்டி
கோயமுத்தூர்.

சூதகரோக நிவாரணி.

பெண்களுக்குள்ள சூதகக்கட்டி, சூதகச்சிக்கல், வயிற்றுவலி, சதை வளர்ச்சி, முதலியவற்றைத் தீர்க்கும், அமிர்த சஞ்சீவி. கேட்லாக் இனாம். விலை ரூ. 2. வி. பி. வேறு.

ஆனந்த நிலையம் திருச்செங்கோடு.

மதனகல்ப லேகியம்.

மலக்கட்டு, பசியின்மை, நரிதஸ்கலிதம் சொப்பனஸ்கலிதம் முதலியவற்றைக் குணப்படுத்தி இந்திரியத்தைக் கட்டுவதில் சிறந்த ருசிகர சித்தரசாயனம். விலை சேர் 1க்கு ரூ. 2 வி. பி. வேறு

ஆனந்த நிலையம், திருச்செங்கோடு. (S. I.)

தமிழ் புக்கீப்பிங்.

விலை நபாய் 1.

கணக்கு வைக்கும் முறையை நன்கு போதிப்பது. ஒற்றைப் பதிவு, இரட்டைப் பதிவு இரண்டு பாகங்களுமடங்கி இருக்கின்றன. அநேக வியாபார இரகசியங்களையு முடையது. வியாபாரிகள், மாணவர்கள், கம்பெனி உத்தியோகஸ்தர்கள் எல்லோருக்கும் அவசியம்.

தே. ஆறுமுக செட்டி,
முதலியார் பேட்டை, புதுச்சேரி

கதர்ப் பத்திரிகைக்கு

வருட சந்தா ஒரு ரூபாய் மாத்திரம்
அல்லது
8000 கஜம் நூல்.

அகில பாரத சர்க்கா சங்கத்தின் தமிழ் நாட்டு இலாகாவாகிய எங்களால் மாதம் இருமுறை கதரைப்பற்றி மாத்திரம் பிரசுரிக்கப்படும். எட்டுப் பக்கங்களடங்கிய

"குடி நூல்"

என்ற கதர்பத்திரிகையின் வருட சந்தாவை ஜனங்களின் உபயோகத்தை முன்னிட்டு ஒரு ரூபாய் அல்லது 8000 கஜம் நூல் என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது சந்தாவை முன்னதாகவே மணியார்டர் அல்லது ஸ்டாம்பு மூலமாக அனுப்பவேண்டும். பத்திரிகையை வி. பி. யில் அனுப்புவதில்லை.

அகில இந்தியாவிலும் விசேஷமாகத் தமிழ் நாட்டிலும் கதரியக்கத்தின் முன்னேற்றத்தைப்பற்றி எல்லாவிவரங்களும் கதரைப்பற்றிய கதர் பக்தர்களால் எழுதப்பட்ட வியாசம், கதை, கவிதை முதலியவைகளும் குடி நூலில் பிரசுரிக்கப்பட்டு வருகிறது கதரியக்கத்தில் பக்தியுள்ளவர்கள் சந்தாதாரர்களாகச் சேர்ந்து வேண்டிய உதவிபுரியுமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.

மானேஜர்,
சர்க்கா சங்கம், ஈரோடு.

ஏஜண்டுகள் தேவை.

வெளிநாடுகளிலும் உள்நாடுகளிலும் நம்முடைய

கதர் பனியன்களை

விற்பனை செய்வதற்கு தக்க ஏஜண்டுகள் தேவை. திறமைக்கு தகுந்தபடி கமிஷன் கொடுக்கப்படும். விபரம் தெரிய விரும்புவோர் ஒரு அணா ஸ்டாம்புடன் தங்கள் விலாசத்தை தெரியப்படுத்தி கொள்ளவும்.

M. V. கருப்பண்ண செட்டியார்,
திருப்பூர்.
(தென் இந்தியா)

தாய்மார்கள்

கவனிக்கவேண்டியது.

சில தாய்மார்களுக்கு பலவித காரணங்களால் பால் சுருங்கி சிசுக்கள் தவிப்பதை நிவர்த்தி செய்து பால் வளரும்படி செய்ய நம்மால் ஒரு தேங்காய் ஜெபித்து வி. பி. செய்யப்பட்டுவருகிறது. 20 வருடத்து அனுபவம், எம்மதஸ்தரும் வாங்கலாம், அனுபவிக்கும் விதம் தேங்காயுடன் அனுப்பிவைக்கப்படும் இதன் விலை தபாற் செலவன்றி ரூ. 1—4—0 மாத்திரம்.

குறிப்பு:—காத்துக்கருப்பு விஷயத்திற்கும் தேக சம்மந்தப்பட்ட வியாதிகளுக்கும், மந்திரத்தாலும மருந்தாலும் சிகித்சை செய்யப்படும்.

விலாசம்:— எ. எஸ். எ. மாந்தரீக டாக்டர்
இறும்தார் வீடு,
சின்னகடைத்தெரு, தெப்பகுளம், திருச்சி.

திருப்பூர்

சுத்த கதர் ஜவுளிகள்.

பலரகம் வேஷ்டிகள், துண்டுகள், வெள்ளை பீஸ் ரகங்கள், ஷர்ட்டிங், கோட்டிங், சீட்டி தினுசுகள், தாவணிகள், சுங்கடி சேலைகள் இன்னும் அநேக தினுசுகள் எங்களிடத்தில் கிடைக்கும். தேவைக்கு ஆர்டர் செய்யுங்கள். வி. பி. அனுப்ப முடியாத வெளிநாடுகளுக்கு பூராத் தொகையையும் முன் பணமாக அனுப்பவேண்டும்.

(அத்தாட்சி பத்திரம்.)

ஸ்ரீமான் ஆர். எம். எஸ். சிதம்பரம் செட்டியார், முத்துசாமி செட்டியார் கைநூலால் கைத்தறியால் தயார்செய்யப்பட்ட சுத்த கத்தர் துணிகளையே உற்பத்திசெய்து நியாயமான விலைக்கு விற்றுவருகிறார்.

S. இராமநாதன்: காரியதரிசி, கத்தர் இலாகா

விலாசம்:—

ஆர். எம். எஸ் சிதம்பரம் செட்டியார்,
முத்துசாமி செட்டியார்,
கத்தர் டிப்போ, திருப்பூர். (தென் இந்தியா)

பெட்ரோமாக்ஸ் லைட்.

லைட்கள், மாண்டில், டூம், தனித்தனி சாமான்யாவும் விலைநயமாய் கிடைக்கும். கியாட்லாக் இனாம்.

ஸன் கம்பெனி, தஞ்சாவூர்.

சர்வமேக சம்ஹாரி.

சகல வெள்ளை, வெட்டை, நீர்க்கடுப்பு, தடிப்பு, முதலிய மேகம் இருபத்தொன்றையும் ஒரு வாரத்தில் குணப்படுத்தும். ஒரு வார மருந்து விலை ரூ 2. வி. பி: வேறு கேட்லாக் இனாம்

ஆனந்த நிலையம் திருச்செங்கோடு. (S. I.)

மூன்று மாதத்தில் மோட்டார் ஓட்ட கற்றுக் கொள்ளலாம்

1916ஹு ஸ்தாபிக்கப்பட்டது.

எங்கள் கம்பெனியில் மோட்டார் வண்டிகளை ஓட்டவும், பிரிக்கவும், பூட்டவும் வேறு பல சீர் திருத்தங்கள் செய்யவும் கற்றுக் கொடுக்கப்படும். தேர்ச்சியடைய மூன்று மாதம் ஆகும் தேர்ச்சி அடைந்த பின்பு கவர்ன்மெண்டு லைசென்சும் எமது கம்பெனி சர்டிபிக்கேட்டும் கொடுக்கப்படும்.

மற்ற விபரத்திற்கு நேரில் எழுதி தெரிந்துகொள்ளலாம்.

மதருஸ் தென்னிந்தியா
மோட்டார் இன்சினீயரிங் ஒர்க்ஸ்,
மைலாப்பூர்-மதருஸ்.

நூதன ஜர்மன் எலக்டிரிக் விளக்கு.

இதை மேஜையின் பேரிலும், சுவற்றிலும், வைக்கலாம். இராத்திரியில் படுக்கையிலிருந்தபடியே விளக்கை இதில் கண்ட கயிற்றின் (wire) உதவியால் எரியவும் நிறுத்தவும் செய்யலாம். புயற்காற்று அடித்தாலும் எரியும். பிரகாசம் கண்ணைப்பறித்துக் கொண்டு போகக்கூடியது. விசேஷ காலங்களில் வைத்தால் திரளானஜனங்கள் அதிசயத்தைப்பார்க்கக் கும்பலாகக் கூடிவிடுவார்கள், மிக ஜாக்கிரதையாக பாக்கிங் செய்தனுப்பப்படும். குறைந்த விலை ரூ. 4—8—0 தபால் செலவு 0—8—0.

பாரீஸ் எம்போரியம், ஜி. டி. மதாராஸ்.

ஸ்ரீமதி நாகம்மாளவர்களால், ஈரோடு "உண்மை விளக்கம்" பதிப்பகத்தில் பதிப்பிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.